# சுடர்

கலை இலக்கியத்
திங்கள் இதழ்



ஆடி 1982 விலை ரூபா 2.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசகர் வாய்மொழி

## சிம்மக்'குரலோன் யாரோ ?

முதல் பக்க கால பலன்களைப் படித்து 'ஓவென்று' சிரிக்கத்தோன்றிற்று. இந்த 'சிம்மம்'க்குரல் யாரோ ?

ஆமாம் இந்த 'அரட்டை' யாரய்யா ? (சுத்தமான) சரியான ஓட்டை வாய் தானய்யா; 'அரட்டை' தொடரட்டும்.

'அரி' அண்ணன் பதில்கள் எங்கள் பசிக்கு சிறுதீனியாக அமைந்தது. தலைவர்கள் தலையில் முக்காடு போட்டு விட்டார்களோ என்னவோ ?

ஓ ! இது போதாதண்ணு ; இன்னும் உடைத்து விடுங்கள் முக்காடு போடட்டும் அவர்கள் மரமண்டைகளை தாக்கி தகர்க்கட்டும்.

மற்றும் பரிசுக்கதையில் தன் குடும்பமே கண்முன் எரிந்ததைக் கண்ட தாய்க்கு எழும் ஆவேஷ உணர்வுகள், குமுறல்களை உண்மையாகவே எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

அருண் விஜயராணியின் "புல்லுருவிகள்" போன்றோர் சமூகத்தில் பல வகையிலும் மலிந்து போய்விட்டிருக்கிறார்கள் அவர்களில் ஒருவகையினரை இனங்காட்டியிருக்கும் பாங்கு பாராட்டத்தக்கதே. இயற்கையாக எழும் உணர்வுகள் சந்தர்ப்பம் சூழல்களால் கெடுவதின் பிரதிபலிப்பே "உணர்வுகள் உறங்குகின்றன" கதைகளின் பக்கங்களுக்கு ஏனிந்த மாறுபாடு ?

**செல்வி கங்கா மங்கை**
சாசாலை

**சுடரின் சில பிரதிகளில் மட்டுந்தான் பக்கங்களின் மாறுபாடு ஏற்பட்டது வருந்துகிறோம்.**

## கண்ணனின் பதில் அல்ல !

சித்திரைத் திங்கள் பாரதி சிறப்பிதழாக வீசிய மணத்தில் கிறங்கிப் போனேன். ஆனால் அக்கிறக்கத்திலும் ஓர் நெருடல். அதில் இடம் பெற்ற எஸ். பி. கிருஷ்ணன் எழுதிய "நீக்குள் விரலை வைத்தால்....." என்ற சிறு கட்டுரையில் வருமாறு கூறப்பட்டுள்ளது.

"ஏனடா நீ நேற்றைக்கு
வரவில்லை வேலைக்கு" என்று கேட்கும்
பாரதிக்குக் **கண்ணன் அளிக்கும் பதில்**
பானையிலே தேளிருந்து .......... என்று
**கண்ணனின் குறும்புகளைச்** சாடிய.........

என்று கட்டுரையாசிரியர் கூறியுள்ளார். ஆனால் உண்மையில் இங்கு கூறப்பட்டபடி கண்ணனின் பதில் அல்ல இது. பொதுவாகச் சேவகர்களின் இயல்பையும், ஏமாற்றுந் தன்மையையுமே பாரதி இங்கே சுட்டிக் காட்டுகின்றார். இதற்கு தக்க சான்று வருமாறு

"கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெல்
லாம் தாம் மறப்பார்
வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே
தங்கிடுவார்
ஏனடா நீ நேற்றைக் கிங்கு வரவில்லை
யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த
தென்பார்
சேவகராற் பட்ட சிரமமிக வுண்டு
கண்டீர்"

என்று இவ்வாறு சேவகர்களின் இயல்பைப் பொதுவாக வர்ணித்த பின்பே தன்னிடம் சேவகனாகக் கண்ணன் வந்து சேர்ந்தமை பற்றியும், ஏனைய சேவகர்களை விடக் கண்ணன் வேறுபட்டிருந்தமையையும் பாரதி விளக்கிச் சொல்லுகின்றார்.

எனவே தொகுத்து நோக்குமிடத்து எஸ். பி. கிருஷ்ணன் அவர்கள் கூறியபடி "ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை" என்று பாரதி கேட்டதற்குரிய பதிலைக் கண்ணன் அளிக்கவில்லையென்பதையும் அப்பதில் பொதுவாக சேவகர்களின் பொய்ச் சாட்டுதல்கள் என்பதையும் தெளிவாக நாம் உணரலாம்.

**செல்வி ரூபா ஜோசப்**
இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு

(33-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்

CHUDAR

(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு: 2013
சுடர்: 8
ஒளி: 4
ஆடி 1982

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.

தொடக்கம்: சித்திரை 1975 தொலைபேசி: 23411


# O 'பசுத்தோல் போர்த்திய கரடிகள்' O

பரிசுத்தமான காவி உடை தரித்த பௌத்த துறவி ஒருவர் இனவாதக் கறை படிந்த இழிவான பேச்சுக்களை 'சிங்கள பல மண்டலய'க் கூட்டத்தில் பேசியிருக்கிறார். தன்மனச் சாக்கடையில் அமிழ்ந்துபோய் கிடக்கும் அழுக்குகளை வாந்தியாக இவர் கக்கியது ஒன்றும் நமக்கு புதுமையல்ல.

ஆனால்—தார்மீக ஜனாதிபதியை, 'சிங்கள மக்களின் துரோகி' என இவர் கூறியதுதான் எமக்கு புதுமையாக இருக்கிறது.

பௌத்த மதக்காவலனை துரோகி என்று பேசலாமா என அப்புத்தளை பிரதிநிதி லொக்கு பண்டார உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் ஒரே மூச்சில் குரலெழுப்பி வருகிறார்கள். நியாயமான கண்டனங்கள்தான்.

இனவாதம் ஒன்றையே தம் அரசியல் பிழைப்புக்கு மூலதனமாகக் கொண்டிருப்பவர்களுக்கு வழி காட்டியாக — முன்னுதாரணமாக திகழ்ந்துவரும் ஜே. ஆரை துரோகி என எப்படி இந்த பௌத்த துறவி குரலெழுப்ப முடியும்?

நெவில் பெர்னாண்டோக்களுக்கும் நந்தா மத்தியூ — சிறில் மத்தியூக்களுக்கும், லொக்கு பண்டாக்களுக்கும் முன், நாட்டில் இனவாத வித்துக்களை நட்டுவைத்த பெருமை ஜே. ஆர். ஜெவர்த்தன அவர்களையல்லவா சாரவேண்டும்? இந்த மகா பெரிய புருசரை 'சிங்கள மக்களின் துரோகி' என கூறுவது எத்தனை சுத்த அபத்தமாக இருக்கிறது. வரலாறு தெரியாமல் புலம்பிவிட்ட இந்த பௌத்த துறவியை தர்ம ஜனாதிபதி மன்னித்தருள வேண்டும்.

மீண்டும் ஒரு இரத்தக்களரிக்கு வித்திடும் வேலையில் முனைந்திருக்கும் 'சிங்கள பல மண்டலய' வின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் சிங்கள பல மண்டலயவின் கூட்டத்தில் இனவாதப் புலம்பல் நடத்தியிருக்கிறார். இவர் ஒரு ஐ. தே. க. ஆதரவாளர்தானே!

கண்டி தலதா மாளிகாவைக்கு பவனியாக வந்த பல மண்டலய ஆதரவாளர்களை கண்டி மேயர் திலக் ரத்னயக்கா வரவேற்றிருக்கிறார். இவரும் ஒரு ஐ. தே. க. அங்கத்தவர்தானே!

கடந்த மேதினத்தன்று தலைநகர் தவிர்ந்த வேறு நகரங்களில் தொழிலாளர்கள் ஊர்வலமாக செல்ல அனுமதிக்கப்படவில்லை. அண்மையில்கூட மட்டக்களப்பில் ஸ்ரீமா அம்மையாரின் விஜயத்தின்போது ஊர்வலம் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் சிங்கள பலமண்டலயவினர் அனுராதபுரத்தில் இருந்து கண்டி தலதா மாளிகை வரை ஊர்வலமாக செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதே. இந்த அனுமதியை வழங்கியது ஐ. தே. க. அரசு தானே!

'சிங்கள பலமண்டலய' வின் இன வாத நடவடிக்கைகளுக்கு, ஐ. தே. க. அரசும், ஐ. தே. க. அங்கத்தவர்களும் எந்தளவு பக்கபலமாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

ஒரு பக்கம் இனவாத பேச்சுக்களுக்கு கண்டனம்; மறுபக்கம் மறைமுக ஆதரவு. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறார்கள். நல்ல வேடிக்கை!

இந்த பசுத்தோல் போர்த்திய கரடிகளை தமிழ் மக்கள் மட்டுமல்ல தமிழ்த்தலைவர்களும் இனம் காண வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மண்ணை மீட்டிடுவோம்!

"கல்முனை மணிக்கவிராயர்"

தமிழர்க்கு உரித்தான தங்கமணி நிலத்தை
தருக்கர் திட்டமிட்டு தட்டிப் பறிக்கின்றார்!
தடுக்க முயன்றாலும் 'தடைச்சட்டம்' எதிராக
தீவெங்கும் வியாபிக்கும்! அதிகாரம் மேலோங்கி
தமிழர் குரல்வளையை நெரிக்கும்! மூச்சு விடில்
தள்ளும் பெருஞ் சிறையில்! 'தங்கள் நிலமென்றும்,
தமிழர்க்கோர் ஆங்குலமும் சொந்தமில்லை' யென்றும்
திமிரோடு பறைசாற்றும்! தமிழினத்தை இம்சிக்கும்!

எங்கள் தமிழுக்காய் எங்கள் இனத்துக்காய்
இன்னுயிரை ஈந்தேனும் போராடிடவே நாம்
பொங்கி யெழுந்து புறப்பட்டுப் போகு முன்னம்
பூண்போம் ஓர் சபதம் - என்ன வெனில்
தங்கியிருந்து தமிழ்பாட தமிழ்மக்கள் வாழ
தருக்கர் சுரண்டுகிற தமிழ் மண்ணைக் காத்திடுதல்
எங்கள் முதல் வேலை! பின்பே மற்றவைகள்!
உறுதி! இதைமறவா தெழுதல் அறிவுடமை!

வேற்றுமைகள் விட்டு விரைந்தொன்று பட்டிங்கே
விழந்கதைகள் மொழியாது வளமார் தமிழர் நிலம்
காக்கப் புறப்படுவோம்! இயக்கம் கண்டிடுவோம்!
மொழிகாக்கும் முயற்சிக்கு முன்காப்போம் தமிழ் மண்ணை!
ஆற்றல் மிகு தமிழர் இனமிங்கே நடமாட
ஏற்ற இடமின்றிப் பறிபோகும்! ஆதலினால்......
சோற்றில் சுகங்காணும் வாழ்வைப் பெரிதென்று
எண்ணாது ஆர்த்தெழுவோம் - தமிழ் மண்ணை மீட்டிடவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சூடு தடுப்பையின் உளறல்:

# கால பலன்கள்

## — சிம்மம் —

### மைத்திரிபால சேனநாயக்க:

இந்த ஐயாவுக்கு கேது பகவான் வக்கரித்து நிற்பதால் கூட இருப்பவர்களே குழி பறிக்கும் ஆபத்து உண்டு. மனைவி சொல் கேட்பதாலும் வினைகள் பல விளையலாம். ராகு தோஷம் மிக மிஞ்சி காணப்படுவதால், ஜே. ஆர். கொடுக்கும் சாவிக்கு ஆடவேண்டிய அவலமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த ராகு தோஷம் இப்போதைக்கு விட்டகலும், சுப சகுனங்கள் காணப்படவில்லை. இத்தோஷ நிவர்த்திக்கு உள்ள ஒரே ஒரு வழி சிறிமா அம்மையாரின் பாதக் கமலங்களுக்கு அஷ்ட நமஸ்கார நைமித்தியங்களை நடத்தி சாஷ்டாங்க பூஜை பண்ணுவதே. முயற்சி செய்க!

### அனுரா பண்டாரநாயக்க:

எட்டாம் இடத்தில் சூரியபகவான் சஞ்சரித்ததால் சில நாட்கள் எடுப்பார் கைப்பிள்ளையாகி 'செல்ல விளையாட்டு'க் காட்டினார். சூரியன் இருந்த வீட்டுக்கு சந்திரன் வந்து விட்டதால் அம்மாவின் அருமைப்பிள்ளையாக மீண்டும் மாறியிருக்கிறார். ஆனாலும் அரசியல் தலையிடி குறைய வழி இல்லை. அம்மாவின் கோஷ்டிக்குள் மீண்டும் ஒரு பிளவு இவரால் ஏற்படும் சாத்தியங்கள் நிறையவே காணப்படுகின்றன. தினமும் அதிகாலையில் சூரிய நமஷ்காரம் பண்ணி வருவதோடு தாம் இருக்கும் முகாமுக்குள் மீண்டும் சச்சரவுகள் ஏற்படாமலிருக்க ஆயிரத்து எட்டு தேசிக்காய்கள் வெட்டி ஒரு கழிப்பும் கழிக்க வேண்டும். யாராவது ஒரு காளிகோவில் பூசாரியை நாடினால் நன்று.

### கலாநிதி தஹநாயக்கா:

பொங்கு சனி முடிந்து மங்கு சனி ஆரம்பமாகிவிட்டது. ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த இந்த சீமான் இப்போது ஜே. ஆரின். நெருப்பில் குளிர்காய்கிறார். கன்னியில் செவ்வாயும் இருந்ததால் தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டார். சனி விளையாட்டின் ஆக்கிரமிப்பிலிருந்து தப்ப வேண்டுமானால் காலி எம். பி. மிக விரைவில் வேலி தாண்டி வேறு கொப்புகளில் இடம் தேடிக்கொள்ளவேண்டும். முடியாவிட்டால் ஏதாவது ஒரு பௌத்த விகாரையில் இடம் பிடித்து ஒதுங்குவதே மேல்.

### திருமதி ரங்கா பத்மநாதன்:

தனுவில் கேது சஞ்சரித்ததால், 'தமையனாரின் மறைவு பெரும் யோகத்தை தேடிக் கொடுத்தது' இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் பத்மநாதனின் தர்ம பத்தினியான இம் அம்மணிக்கு எதிர்காலம் கம்மியாகவே காணப்படுகிறது. அடுத்த தேர்தலில் பொது மக்கள் காலை வாரிவிடு முன்பே, ஐ. தே. க. தலைமைப் பீடம் கைவிடவேண்டிய தர்ம சங்கட நிலை தோற்றக்கூடும். உகந்த மலை முருகனை நம்பிப்பயன் இல்லை. ஜெயவர்த்தன உற்சவ மூர்த்தியை பல முறை சுற்றி சுற்றி வலம் வந்தால் பாராளுமன்ற அருட்காடாட்சம் கிட்டாவிட்டாலும் வேறு யோகங்கள் ஏற்படலாம். உதவிக்கு கே. டபிள்யு. தேவநாயகத்தை சேர்த்துக் கொள்க.

### பூ. கணேசலிங்கம்:

துலாத்தில் வியாழன் சஞ்சரிப்பதால் நித்திரையிலாது தவிக்க நேரிடும். அடிக்கடி கனவில் கவிஞர் காசி ஆனந்தனே விஸ்வ ரூபமாகத் தோன்றி வலம் வருவார். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரே கூட்டணி எம். பி. என்ற பெயரும் புகழும் அடுத்த தேர்தலுக்குப் பின்னர் அடிபட்டுப் போகுமோ என்ற பயமும் வருத்திக்கொண்டேயிருக்கும் ஆனாலும் கவலை வேண்டாம். வேட்பாளர் பட்டியலில் முதல் ஆளாக இடம்பெற கிரகங்கள் அனுகூலமாகவே அமைகின்றன. இருந்தாலும் சிறு சிறு விக்கினங்களை அகற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோவிலில் அங்கப்பிரதிஷ்டை பண்ணி வருக!

### திருமதி சிறிமா பண்டாரநாயகா:

ஏழரைச்சனி பிடித்து ஆட்டுவதால் சோதனைகாலம் தொடர்கதையாகவே இருக்கின்றது. கட்சிக்குள் தோன்றும் பிரச்சினைகளை விட குடும்பத்தில் நிகழும் சச்சரவுகள் மனதையும் மண்டையையும் போட்டு உலுக்கிக் கொண்டேயிருக்கும். '6 பண மூட்டைகள் விவகாரம்' தற்போதைக்கு சூடு பிடித்தாலும் காலப்போக்கில் தணிந்து குளிர்ந்து விடலாம். புது விருந்தாளி ஒருவர் கட்சிக்குள் வரவிருப்பதாலும் உபாலியின் பக்கத்துணை பலமாக இருப்பதாலும் மனப்பயம் குறையலாம். கதிர்காமக் கந்தனிடம் அடிக்கடி சென்று வந்தால் காரியங்கள் சித்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி புள்ளிகள்

**மா. பாலச்சந்திரன்.**
*கொழும்பு-13*

**கே:** பாலம் வேண்டுமா? ஈழம் வேண்டுமா என கடந்த பொதுத் தேர்தலில் கேட்ட தமிழ்த் தலைவர்களின் இன்றைய நிலை என்ன?

**ப:** பாலந்தான் போடுகிறார்கள். ஐ. தே. க. வுக்கும் த. வி. கூ. விற்கு மிடையில் பேச்சுவார்த்தை என்ற பலமான பாலந்தானே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் நாம் ஈழம் காணுவோம்.

**கே:** விமர்சனத்தையே விரும்பாத அண்ணன் அமிரின் தற்போதைய சர்வாதிகாரப் போக்குப்பற்றி தங்கள் அபிப்பிராயம்.........?

**ப:** பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல், ஜே. ஆரோடு பேரம் பேசும் அமிர் அண்ணரும்........... (நீங்களே நிறைவு செய்து கொள்ளுங்கள்)

**ந. குமரகுரு**
*கொழும்பு-3*

**கே:** செஞ்சேற்றுக் கடன் என்றால் என்ன?

**ப:** கவிஞர் காசி அண்ணா விடம் கேளுங்கள் அவர்தான் விளக்கம் சொல்வார்.

**கனக பிரதீபன்**
கேணியடி,
கொக்குவில் மேற்கு

**கே:** ஈழ மாணவர் பொது மன்றத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**ப:** அரசியலில் தெளிவும், விழிப்புணர்ச்சியும் பெற்று விட்டவர்கள் என்பதே.

**கே:** தமிழர்கள் மத்தியில் பல இயக்கங்கள் தோன்றுவது தமிழனின் நன்மைக்கா தீமைக்கா?

**ப:** தமிழ் மக்கள் மத்தியில் பல அரசியல் கட்சிகள் தோன்றினால் அது ஆபத்து. விடுதலை நோக்கில் இயக்கங்கள் தோன்றினால் அது நன்மைக்கே. ஆனால் ஆளை ஆள் ஒளித்துக் கட்டும் இயக்கங்கள் வேண்டவே வேண்டாம்.

**கே:** சாவகச்சேரி பாராளு மன்ற உறுப்பினர் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவது பற்றி தங்கள் கருத்து என்ன?

**ப:** கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னரும் இப்படி ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது: தற்போது தேர்தல் நெருங்கும் சமயத்திலும் அப்படி ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. இதில் உண்மை இருந்தால் வரவேற்க வேண்டியதே. சாவகச்சேரி பிரதிநிதி மட்டுமல்ல, பாராளு மன்ற நாற்காலிகளுக்கு பாரமாக இருக்கும் தமிழ் பிரதிநிதிகள் பலரும் ஒதுங்கி விடுவதால் குடி ஒன்றும் முழுகிப் போய் விடாது.

**எம். பாலகிருஷ்ணன்**
*கொழும்பு-12*

**கே:** சிறிமா அம்மையாருக்கு எதிரான திரு. மைத்திரி பால சேனநாயக்காவின் நடவடிக்கைகள் நியாயமானவை தானா?

**ப:** ஆட்டிவைத்தால் ஆரொருவர் ஆடாதாரே கிருஷ்ணா?

**கதிர் தம்பிராசா.**
*18/2, எல்லை வீதி,*
*மட்டக்களப்பு.*

**கே:** 'பெருந்தலைவர்' வந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் 'கானா' வையும் 'சாவன்னா' வையும் 'ஒற்றுமைப்படுத்தி' விட்டாராமே, உண்மையா?

**ப:** 'வெடிப்பு' களை மூடா மலே பூசி மெழுகியிருப்பதாகத்தான் கேள்வி. இதனால் தேர்தல் நெருங்க நெருங்க சுவர் இடியும் ஆபத்தும் உண்டு.

**கே:** இயக்கங்கள் ஒன்று டன் ஒன்று முட்டி மோதுவதால் 'தமிழினம்' எந்த நன்மையை அடையப் போகிறதாம்? இதற்கு 'அரி' யின் 'அட்வைஸ்' என்ன?

**ப:** ஸ்ரீலங்கா படைகளின் வேலையை இவர்கள் மிக இலகுவாக்குவதன் மூலம் இலட்சியத்தை நீண்ட காலத்துக்கு அடவுவைக்கும் வேலையை கைவிட வேண்டும்.

**கே:** தமிழீழப் பிரதேசங்களின் தலை நகரங்களின் பெயரால் ஒவ்வொரு சிறப்பிதழ் வெளியிடுவீர்களா? அந்த எண்ணம் உண்டா?

**ப:** நிச்சயம் உண்டு. தங்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால் இது என்ன பெரிய காரியமா?

**கே:** 'சீதனமில்லையே திருமணம் செய்ய' என்று ஏங்கும் தமிழ்க் கன்னிகளிடையே 'சீதனம் தந்துதான் திருமணம் செய்வேன் அல்லது மாட்டேன்' என்று சொல்லும் கன்னியர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** நவீன கோடரிக் காம்புகள்!

**த. சிவநாதன்,**
பிரதான வீதி,
செட்டிக்குளம்.

**கே:** தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை இலங்கை தார்மீக அரசிடம் இந்திய அரசு ஒப்படைக்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: ஒப்படைக்கப் போவதாக உங்களிடம் யார் சொன்னது? நமது 'இரத்தங்கள்' அங்கு விவாதித்துக் கொண்டிருப்பது உமக்கு புரியவில்லையா சிவநாதா?

கே: "புலிகளின் விவகாரத்தில் தி.மு.க. அ.தி.மு.க' ஏனைய கட்சிகளினது ஒருமித்த குரல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: மிக மிகப் பெருமையாக நினைக்கிறேன்.

கே: ஐந்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்த நம் தலைவர்கள் புதிய நாடாளுமன்றத்துக்குள்ளும் அடிவைத்து விட்டார்களே. ஏதாவது ஒரு கோரிக்கை இதுவரை நடைமுறைக்கு வந்துள்ளதா?

ப: நானறிந்த வரை எதுவுமே நடைபெறவில்லை. அண்ணன் அமிரிடம் கேளுங்கள். ஒரு பட்டியலையே வாசித்துக் காட்டுவார்.

எஸ். நாகராஜா.
செக்கட்டிப்புலவு,
வவுனியா.

கே: தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த இளைஞர்களுக்கு சிலை வைத்தால் அவர்கள் நம் நெஞ்சங்களுள் காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பது என் அபிப்பிராயம்.........?

ப: உரும்பிராய் தியாகி சிவகுமாரன் சிலைக்கு நேர்ந்த கதி உமக்குத் தெரியாதா? எவரும் கல்லினால் சிலை வைப்பதைவிட நெஞ்சில் சிலை அமைப்பது மேல்.

இரா. இராஜன்.
ராஜபவனம்,
சங்கானை.

கே: செல்வா காலத்தில் உள்ள அமிருக்கும், இப்போ உள்ள அமிருக்கும் சரியான மாற்றம் என ஒரு வதந்தி அது வதந்தியா? உண்மையா?

ப: உண்மையேதான். அன்று நாம் கண்ட அமிர் அண்ணை பெரும் தியாகச் செம்மல். இன்று காணும் அமிர் அண்ணை வெறும் ஸ்ரீலங்கா எதிர்க்கட்சி முதல்வர்.

---

பார்பரா கின்தொம்ஸன் எனும் 33 வயதுப் பெண்மீது கலிபோர்னியா மாநில நீதிமன்றத்தில் 2,40,000 டாலர்கள் (20 இலட்சம் ரூபா) பொய்க் கணக்குக்காட்டி மோசடி செய்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. குழந்தை இல்லம் நடத்துவதாகவும் 47 குழந்தைகள் பராமரிக்கப் படுவதாகவும் கூறி ஏழு வருடகாலம் உதவித் தொகை பெற்றுவந்தாளாம். ஆனால் அங்கு 4 குழந்தைகள் மட்டுமே இருந்தனவாம்.

---

முற்றிலும் பெண்களே நடத்தும் கடைவீதி ஒன்று இம்பாலாவில் (மணிப்பூர்) இருக்கிறது இக்கடைகளில் பணிபுரியும் பெண்களுக்கு இலவசமாக பீடி, புகையிலை முதலியன வழங்கப்படுகின்றனவாம்.

---

இங்கிலாந்தை சேர்ந்த நைட்டிங் கேலான ரீடா, ஹங்காங் நைட் கிளப் ஒன்றில் வரவேற்பாளராக பணியாற்றி வந்தாள். அண்மையில் பாங்கொக் நீதிமன்றத்தில் இவள்மீது வழக்கு தொடரப்பட்டு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தாய்லாந்தில் மிகக் கடும் தண்டனை பெற்றமுதல் பெண் இவள்தானாம். இவள் செய்த குற்றம் போதை வஸ்துகளை (Heroin) வைத்திருந்ததே.

---

தென்னாபிரிக்க ஜுலு இன கல்யாணமாகாத பெண்கள் மரத்தாலான கத்தியொன்றை கையில் வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு திருமணம் ஆகவில்லை என்பதற்கு அடையாளமாம் அது.

---

யாழ். நாதன்.
பிள்ளையார் கோவில்,
நிலாவெளி.

கே: இம்முறை நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் குதிக்கவிருக்கும் தலைவர்களின் நோக்கம் என்ன? கூறுங்கள்.

ப: பாராளுமன்றத்துக்குள் நுழைந்து மீண்டும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி ஏமாந்துகொண்டே போவது.

சிவ மணிமாணிக்கவாசகர்,
'செல்வபவனம்'
தங்கோடை,
காரைநகர்

கே: எமது வட்டுக் கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு அவர்களின் குரலை பாராளுமன்றத்தில் காணோமே காரணம் என்ன? என்று கூறுவீர்களா அரி அண்ணை.

ப: பேசிப்பேசி என்ன பயன்தான் ஏற்பட்டிருக்கிறது. என்றமுடிவுக்கு அவர் வந்திருப்பது காரணமாக இருக்கலாம். இவர் மட்டுமல்ல, நமது பிரதிநிதிகள் பலரும் இப்போதெல்லாம் மௌனவிரதமே அனுட்டித்து வருகிறார்கள்.

கே: தமிழர்களில் சிலர் இன்னும் ஐ. தே. கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்களே இவர்களின் எதிர்காலம் எப்படி அமையும்?

ப: மிகச் சிறப்பாக அமையும் வீட்டில் சாய்வு நாற்காலியில் ஓய்வு எடுக்கும் சிறப்பை மிக இலகுவில் பெறுவார்கள்.

கே: இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் சில செய்திகளை இருட்டடிப்பு செய்கிறார்களே. இது அவர்களுக்கே நியாயமாகுமா?

ப: இருட்டடிப்பு மட்டுமா செய்கிறார்கள்? எத்தனையோ செய்திகளை அவர்கள் மழுங்கடிப்பும் பண்ணுகிறார்கள். கேட்டுத் தொலைக்க வேண்டியது நம் தலைவிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரட்டை

நாடெங்கிலும் தனது கட்சியின் செல்வாக்கு வளர்பிறையாக இருக்கிறதா அல்லது தேய்பிறையாக இருக்கிறதா என்பதை கண்டறிய ஐ. தே. க. ஒரு ஆய்வுக்குழுவை இரகசியமாக அமைத்து தொகுதிவாரியாக தனக்கிருக்கும் ஆதரவை அளவிட்டு விட்டு கதிகலங்கிப் போய் இருப்பதாக தெரிகிறது.

ஆதரவு அதிகமாகவேயிருக்கிறது' என அக்குழு சிபார்சு செய்திருந்தால் இந்நேரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலும் நடைபெற்றிருக்கலாம். 'ஆதரவு அருகியே காணப்படுவதாக பரிந்துரை செய்யப்பட்டதால், சிறிமா கட்சியினருக்கு பெருகி வரும் செல்வாக்கை எப்படிக் குறைக்கலாம் என்பதில்தான் இப்போது மண்டையைப் போட்டு குழப்பி வருகிறார்களாம். 'ஆறு முடைகள் பண விவகாரம்' கிடைத்தே விட்டது மனதுக்கு ஒரு ஆறுதலாகி விட்டதாம்.

இது ஒரு புறமிருக்க, இந்த ஐ. தே. க. ஆய்வுக் குழுவினர் இன்னுமொரு பரிந்துரையையும் அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதாக தெரிய வருகிறது. 31 வயதுக்கு மேற்பட்டோருக்கே ஆழ்ந்து சிந்தித்து நல்ல அரசாங்கமொன்றை தெரிவு செய்யும் மனப்பக்குவம் இருப்பதால் 31 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமையை வழங்கும் விதத்தில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே அந்த விசேட பரிந்துரை ஆகும்.

இதை நடைமுறைக்கு கொண்டுவருவது சாத்தியமாகாது என்பதால் தேர்தலை ஒத்தி வைக்க ஏதாவது ஒரு காரணத்தை தாங்களே உருவாக்கி பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டலாமா என சிந்தித்து வருவதாகவும் அரசியல் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.

சிங்கள பல மண்டலயவின் துவேச பிரசார நடவடிக்கைகளை ஆழ்ந்து அவதானித்துப் பார்த்தால் இந்த கிசுகிசுவில் எந்த அளவு உண்மை அடங்கியிருக்கிறது என்பது தெளிவாகும்.

ஃ ஃ ஃ ஃ

ஐ. தே. க. வில் இருக்கும் போது மந்திரி மத்தியூவின் வலது கரமாக இருந்து செயல் பட்டுவந்த முன்னாள் பாணந்துறை பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் நெவில் பெர்னாண்டோ, தமிழ் மக்கள் மறக்கமுடியாத விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரில் ஒருவராவார். அவரின் கடந்தகால பேச்சுக்களும் நடவடிக்கைகளும் பசுமரத்தாணிபோல் தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் பதிந்திருக்கின்றன.

தனக்கென ஒரு கட்சியை ஆரம்பித்து விட்டு செயல்பட முடியாமல் தவித்த இவருக்கு பொருத்தமான ஒரு தங்குமடத்தில் இடம் எடுத்து கொடுத்திருக்கிறாராம் திரு. உபாலி விஜேவர்தனா.

மிகவிரைவில் சிறிமா அம்மையாரின் அணியில் இவர் இணைந்து விட்டார் என்ற சேதியை நாம் எதிர்பார்க்கலாம்.

ஃ ஃ ஃ ஃ

அண்ணன் அமிர் அவர்கள் கொழும்பில் நடந்த கூட்டமொன்றில், 'ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் சேர்ந்து யாழ் நூல் நிலையத்திற்கான நிதி சேர்ப்பதில் பெருமைப்படுகிறேன்' என பேசியிருப்பது மிக வேடிக்கையானது.

அரசபடையினரின் காட்டுமிராண்டித்தன நடவடிக்கைகளால் எரியுண்ட நூல் நிலையத்தை மீள அமைக்கும் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததாகும். பல கோடி ரூபாவை இதற்காக ஒதுக்கிக்கொடுத்திருந்தால் நிதிசேர்க்கும் சிரமம் எமக்கு ஏற்பட்டிருக்காதல்லவா?

முன்பு ஒருமுறை 'இந்தியா ருடே' என்ற பத்திரிகை நிருபருக்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா பேட்டி அளித்தபோது, யாழ். எம். பி. பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர் என, சந்தேகிக்கப்பட்டதால்தான் இவ்விதம் நடந்துள்ளது' என எரிக்கப்பட்டதையே நியாயப்படுத்திய ஜனாதிபதியுடனும், நூல் நிலையம் எரிக்கப்பட்டவேளை எந்த வித அனுதாபமோ கவலையோ தெரிவிக்காத பிரதமருடனும் சேர்ந்து நூல்நிலையத்துக்கான நிதி சேகரிப்பது எதிர்க்கட்சித் தலைவருக்கு பெருமை அளிக்கும் விடயமாம்!.

வண. பிதா தாவீது அடிகளின் ஆத்மா சாந்தி அடைவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துலகில் ஒரு 'இராவணன்'

## இந்த செ. குணரத்தினம்



பழம்பெரும் எழுத்தாளர்கள் பலர் இன்று எழுத்துலகில் இருந்து ஒதுங்கியிருக்கும்போது அன்று முதல் இன்று வரை இடைவிடாது தொடர்ந்து எழுதிக்கொண்டேயிருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய இரண்டொரு மட்டக்களப்பு எழுத்தாளர்களில் முன்னணியில் இருப்பவர் கவிஞர் செ. குணரெத்தினம் அவர்கள்.

கவிஞர் என்று பெயர் பெற்ருலும் இவர் கைவைக்காத இலக்கிய வடிவங்களே இல்லை எனலாம். நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், குறுங்கதை, மணிக்கதை, உரைவீச்சு, உருவகக் கதை, நகைச்சுவைத் துணுக்கு என்ற அத்தனை வடிவங்களிலும் இவர் தனது கைவண்ணத்தைக் காட்டியதுமல்லாமல் இவை ஒவ்வொன்றிலும் பரிசுகளும் பெற்றிருக்கிருர்.

இவர் பெற்ற பரிசுகளில் ஞாபகத்திலிருந்து சிலவற்றைக் கீழே தருகிறேன்:

(1) 'தினகரன்' திங்கள் விருந்து ஈ. வே. ரா. கவிதைப்போட்டியில் பரிசு.
(2) 'சுதந்திரன்' மூலம் லண்டன் தமிழ்ச் சங்கம் நடாத்திய தந்தை செல்வா நினைவுக் கவிதைப் போட்டியில் பரிசு.
(3) 'சுடர்' நடாத்திய வெண்பாப் போட்டியில் பரிசு.
(4) 'வீரகேசரி' எழுத்தாளர் ஆண்டு நாவல் போட்டியில் 2 ஆவது பரிசு.
(5) 'தினபதி' இளைஞர் மன்றம் குழந்தைக் கவிதைப் போட்டியில் பரிசு.
(6) 'கலாவல்லி' குறுநாவல் போட்டியில் 2 வது பரிசு.
(7) 'சிரித்திரன்' அ. ந. கந்தசாமி நினைவு சிறுகதைப் போட்டியில் பரிசு.
(8) 'கலைச்செல்வி' அட்டைப்படக்கவிதைப் போட்டியில் பரிசு.
(9) 'சித்ரா' சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
(10) யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களின் தசாவதானி கதிரவேற்பிள்ளை நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு.
(11) யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களின் ஒன்றியம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 2 வது பரிசு.
(12) மட்டக்களப்பு ஸ்ரீ லங்கா கூட்டுறவுச் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் 2 வது பரிசு.
(13) மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை நடாத்திய விபுலானந்தர் கவிதைப் போட்டியில் முதற் பரிசு.
(14) 'தேன்மதி' நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு.

இந்தப் போட்டியில் இடம்பெருத வேறு பரிசுகளும் இருக்கலாம். இப்பட்டியலிலிருந்து நாவல், சிறுகதை, கவிதை ஆகிய முத்துறைகளிலும் செ. கு. அவர்கள் பரிசு பெற்றிருப்பதை நாம் அவதானிக்கலாம். மேலும் இந்தப் போட்டிகளில் அநேகமானவை அகில இலங்கை ரீதியிலானவை. சில மாவட்ட ரீதியிலானவை. அதிலும் கடந்த ஒரு பத்தாண்டு காலத்தில் அவர் பெற்ற பரிசுகள் இவை. இப்படிப்பட்ட ஒருவரை எழுத்துலகில் 'இராவணன்' என்று வாணிப்பதில் தவறிருக்கமுடியாது அல்லவா?

இப்படிப் பல துறைகளில் இவர் தனது முத்திரையைப்பதித்தாலும் கவிதையே அவரது உயிர்மூச்சு. மிகவேகமாக எழுதிக்குவிக்கும் ஆற்றல் பெற்ற இவர் "இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்ருல் ஆயிரமும் ஆகாதோ" என்ற பாடல்வரிகளை நினைவூட்டும் வகையில் கவிபாட வல்லவர். இவர் இதை நிரூபித்திருக்கிருர். ஓடும் ரயிலில் கையில் கிடைத்த காகிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு கவிதை எழுதி, அன்றே தபாலில் சேர்த்து விடுவதுமல்லாமல், சிறுகதை கட்டுரைகளைக் கூட இதேவேகத்தில் எழுதிவிடுவார்.

கவிஞராகப் பெயர்பெற்ற இவர், மற்ற இலக்கிய வடிவங்களிலும் கைவைக்க வேண்டி வந்தது ஏன் என்பதை இவரே ஒரு பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிருர்.

"என் உள்ளத்தில் ஒரு எண்ணப் பொறி தோன்றி விட்டால் அதை எழுத்தில் வடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் வரை நிம்மதியிருக்கா்து. இரவு எவ்வளவு நேரமானாலும் விழித்திருந்து அதை எழுதி முடித்து விடுவேன். சில வேளைகளில் ரயில் பயணத்தில் போகும்போதும் வேலைத் தலத்தில் கிடைக்கும் சிறு ஓய்வு நேரத்திலும் எழுத்தில் மூழ்கிவிடுவேன்.

''மனதில் ஒரு இலக்கியகரு தோன்றும் போதே எந்த வடிவத்தில் அது அமைய வேண்டுமென்றும் உள்ளத்தில் பதிந்துவிடுகிறது அதற்கேற்ப கவிதைகளாகவோ, சிறு கதையாகவோ, நாடகமாகவோ, குட்டிக் கதையாகவோ, உருவகக் கதையாகவோ, அதற்கு உருவம் கொடுக்கிறேன். சில வேளைகளில் புதுக்கவிதை வடிவம் கூட சில இலக்கியக்கருத்துகளுக்கு இயைந்த உருவமாக அமைந்து விடுகிறது''.

கவிஞர் செ. கு. அவர்களைப் பிரபலராக்கிய மற்றொரு துறை இலங்கை வானொலியின் மெல்லிசைப் பாடலாகும். இன்று வானொலியில் ஒலிக்கும் மெல்லிசைப்பாடல் நிகழ்ச்சிகளில் இவரது பாடல் ஒன்ருவது இடம்பெருமல் போகாது. இவரது மெல்லிசைப்பாடல்களில் குழந்தைப்பாடல்கள் நெஞ்சைத் தொடுபவை.

''மல்லிகைப்பூ இவள் உள்ளம் பேசும், மழலைக்கதைகளோ வெல்லம்''
''பாப்பா முகத்தில் பால்நிலவு''
''பவழத்தேர் ஒன்று தங்கத்தேர் ஒன்று மண்ணில் தவழ்ந்து வந்தது''
''அல்லி விழிமூடும் அமுதத்தேன்''
''குழந்தை வடிவில் இறைவன் எனது குடிசையில் வாழ்கிருன்'' போன்ற பாடல்களை யார்தான் மறக்க முடியும்.

இவை தவிர ''நெஞ்சறியத் தீமை செய்யாதே'' ''கொடுத்து வாழவேண்டும்'' ''உலகில் வாழும் மனிதரெல்லாம் ஒரு குடும்பம்'' முதலிய தத்துவப் பாடல்களும் ''இறைவன் எழுதிய பாடல்'' ''கதிர்காமம் வாழ்கின்ற வேலவா'' ''என்னேடு ஏன் இந்தக் கோபமையா'' முதலிய பக்திப் பாடல்களும் வானொலியில் ஒலிக்கும் நூற்றுக்கணக்கான மெல்லிசைப்பாடல்களில் சில.

கவிதைகளோ என்ருல் குறுங்கவிதை, நெடுங்கவிதை கவியரங்கக்கவிதை பல தொகுதிகள் வெளியிடும் அளவுக்கு இவரது வீட்டில் குவிந்து கிடக்கின்றன. வெளியிடும் வாய்ப்புக்கள்தான் இல்லை.

கவியரங்குகளில் இவர் தலைமை வகித்தாலோ அல்லது பங்குபற்றினுலோ, மற்றவர்களை விட வித்தியாசமாக, புரட்சிகரமாக ஏதாவது சொல்லி சபையோரின் பாராட்டுதலைச் சுலபமாகப் பெற்றுவிடுவார். நகைச்சுவையாக, அங்கதச்சுவையாக, விண்டல்களாகப் பல விடயங்களைக் கவிதைகளிலேயே சொல்லிவிடும் சாமர்த்தியம் இவரிடம் நிறைய உண்டு.

ஏழை மக்களின் எண்ணத்துடிப்புகளை படிப்போர் இதயத்தைத் தொடும் வண்ணம் கவிதையாக ஆக்குவதும் இவருக்குக் கைவந்த கலை. சிலவேளைகளில் தார்மீகக் கோபம் பொங்கியெழச் சுரண்டல்வாதிகளைச் சுடும் வகையில் மிகக் காரசாரமாக இவர் கவிதைகள் வெளிவந்ததுண்டு அது மட்டுமல்ல அண்மையில் வெளிவரவிருக்கும் ''பாதை மாறிய பருவங்கள்'' திரைப்படத்துக்கும் இவர் சில பாடல்களை எழுதியுள்ளார்.

சிறுகதைகளின் மணவாசனை, இவரது தனித்துவம், இவர் வாழும் அமிர்தகழி பகுதி மக்களின் வாழ்க்கைப்போராட்டங்கள், அவர்களது பேச்சு வழக்கு எல்லாம் மிகத்தாராளமாக இவரது கதைகளில் வெளிப்படுவதுண்டு. மீனவர்களது வாழ்க்கை அவலங்களையும் கடல் வாழ்க்கையின் கஷ்டங்களையும் சித்திரிக்கும் பல சிறுகதைகள் அண்மைக் காலமாக வெளிவந்துள்ளன.

''உள்ளம் ஒரு மல்லிகை'' ''அலைகடல் ஓய்ந்தாலும்'' ''நினைவு ஒன்று நிறைவேறுகிறது'' ''சொந்தம் எப்போதும் தொடர் கதைதான்'' ''சங்கமம்'' முதலிய நாவல்களை இவர் எழுதியிருந்தாலும் ''நினைவு ஒன்று நிறைவேறுகிறது'' என்ற நாவல் மட்டும்தான் தொடர்கதையாகப் பிரசுரமாகியுள்ளது. ஏனைய நாவல்கள் பிரசுரத்திற்குக் காத்திருக்கின்றன. இவற்றுள் பரிசு பெற்ற நாவல்களும் அடங்கும்.

''மக்களுக்காக எழுதுகிறேன்'' என்று மற்றவர்களைப்போல் பீற்றிக்கொள்ளாமல் ''ஆத்ம திருப்திக்காக எழுதுகிறேன் என்ருல் எழுதாமல் இருக்கமுடியாது'' என்று கூறும் இவரது இலக்கிய நேர்மை இவரது எழுத்தின் சத்தியத்துக்கு உரைகல்.

பத்திரிகைத்துறையில் மட்டுமல்லாது ஏனைய கலைத்துறைகளிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. வானொலியில் பல சிறுகதை, நாடகம், சித்திரம் முதலியன ஒலிபரப்பாகியுள்ளன. வானெலியில் சில இலக்கியக்கருத்தரங்கு கவியரங்குகளிலும் அவர் பங்குகொண்டுள்ளார். நாட்டுக்கூத்துக்கள் சிலவற்றை இயற்றியும், மேடை நாடகங்கள் சிலவற்றை ஆக்கியும், நற்பெயர் பெற்றுள்ள இவர், முன்பு மாஸ்டர் சிவலிங்கம் நடாத்திய வில்லுப்பாட்டுக்குழுவில் ஒரு பாடகராகவும் இருந்திருக்கிருர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்!

இலக்கிய உலகில் இத்தனை புகழ் பெற்றிருந்தாலும், மிகவும் அடக்கமாக ஒரு இனிய மனைவி, ஐந்து குழந்தைகள் கொண்ட சிறிய குடும்பத்துடன் கவிஞர்களுக்கே உரிய எளிமையான வாழ்க்கையை மனநிறைவுடன் நடாத்திவரும் கவிஞர் செ. கு. பழகுதற்கு இனியவர் பண்பாளர், குழந்தையுள்ளம் கொண்டவர், கோடி கொடுத்தாலும் பெற முடியாத ஆத்ம திருப்தியை இந்த இலக்கிய ஈடுபாடு எனக்குத் தருகிறது என்ற கொள்கையுடன் குறையிலும் நிறைவு காணும் குணரெத்தினமாக வாழ்பவர்.

— அன்புமணி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையைத் தொடாத அலைகள்

'தமிழ்ப்பிரியா'




இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கை வந்து சாய்ந்ததும் தூக்கம் இமையோடு இணைந்துகொள்ளும் வரை ஏதாவது படிக்க வேண்டும் போலிருந்தது ஷியாமிக்கு. நேற்று- படிக்க ஆரம்பித்து முடிவு பெறாமலிருந்த செம்பியன் செல்வனின் "நெருப்பு மல்லிகை" நாவலை கையிலெடுத்துக் கொண்டு படுக்கையில் வந்து சாய்ந்து கொண்டாள் ஷியாமி.

அம்மா மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். ஷியாமிக்குள் எழுந்த 'ஏன்?' என்ற கேள்வியில் மனம் ஒரு முறை ஜில் என்று சிலிர்த்து ஓய்ந்தது. நேற்றுக் கதைத்த கதையின் முடிவிற்காகத்தான் அம்மா இப்போது வந்திருக்கிறாள்.

அம்மா சட்டென்றே விடயத்திற்கு வந்தாள். "நாளைக்கு அவையளுக்கு முடிவு சொல்ல வேணும் ஷியாமி. உன்ரை விருப்பத்தை அறியாமல் நாங்கள் எப்பிடிச் சம்மதம் சொல்லுறது...?"

"நீங்கள் சம்மதம் சொல்ல வேண்டிய அவசியமில்லையம்மா. எனக்கு இந்தக் கலியாணத்திலை விருப்பமில்லை. மாப்பிளையைப் பிடிக்கேல்லை...!"

அலட்டிக் கொள்ளாமல் மிக அமைதியாக — ஒரு அலட்சியப் பாவத்தோடு அவள் சொன்ன போது...... அம்மா அதிர்ந்து போனவளாய் ஷியாமியை நிமிர்ந்து பார்த்தாள்.

"உனக்கு ஏன் அவனைப் பிடிக்கேல்லை? என்ன குறை அவனுக்கு? படிப்பு...... பதவி என்று எல்லாவற்றிலும் உனக்குத் தகுதியாகத்தானே இருக்கிறான்...!"

அம்மா வார்த்தைகளை நிறுத்தி அவளைப் பார்த்தாள். "நீங்கள் சொல்ல வேண்டிய- சொல்ல விரும்புகின்ற எல்லாவற்றையும் சொல்லி முடியுங்கள்......!" என்பது போல் ஷியாமி புத்தகத்தின் மீதே பார்வையைத் தங்க விட்டபடியிருந்தாள். ஒரு நிமிஷ நகர்வின் பின்னும் மௌனத்தைத் தொடர முடியாதவளாக அம்மா தான் பேசினாள்—

"உன்னைப் போல அழகான, படித்த, உயர்ந்த பதவி வகிக்கிற ஒருத்திதான் தனக்கு மனைவியாக வரவேணும் என்பதுதானும் அவனின் விருப்பம். அதனாலைதான் உடனை சம்மதித்து விட்டான். ஆனால்.. உனக்கு மட்டும் ஏன் அவனைப் பிடிக்கேல்லை?"

புத்தகத்தின் மீது ஊர்ந்து கொண்டிருந்த பார்வையை சடாரெனத் திருப்பி அம்மாவைப் பார்த்தாள் ஷியாமி.

"இதற்காகத் தான்— உயர்ந்த பதவி வகிக்கிற ஒருத்தி தனக்கு மனைவியாக வர வேணும் என்று அவன் விரும்புகின்றானே... அதற்காக- அந்த ஒன்றிற்காகத்தான் எனக்கு அவனைப் பிடிக்கேல்லை...!" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது அவளுக்கு. "என் பார்வையின்- அர்த்தம் உனக்குப் புரிகிறதா அம்மா?" என்று கேட்பது மாதிரி ஒரு நிமிஷம் வரை அம்மாவின் மீதே பதிந்து நின்ற பார்வையை ஷியாமி விலக்கிக் கொண்டபோது...... அந்த மௌனத்தின் தாழ்வை தாங்கிக் கொள்ள முடியாமல் அம்மாவின் மனம் தொய்ந்து போய்விட்டது.

---

இக் கதையைப் படித்ததும் வேலை பார்க்கின்ற பெண்கள் — அதிலும் தாய் தானத்திலுள்ளவர்கள்...... மனதில் சின்ன ஆத்திரம் சினப்பாய் மின்னும் என்பது எனக்குத் தெரியும். ஆனால்...... நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நானும் அதே வேலை பார்க்கின்ற பெண்கள் வரிசையைச் சேர்ந்தவள் தான். ஆனால்... அதற்காக நிதர்சனத்திற்கு எதிராக ஒரு போலிப் போர்வை போர்க்க நான் தயாராக இல்லை. இக் கதையின் நாயகி ஷியாமிக்கு ஏற்பட்ட மனத்தாக்கம் மற்றவர்களுக்கு ஏற்படாமல் இருக்கலாம். அதனால்... உண்மை இல்லையென்றாகி விடமாட்டாது. இன்று அநேகமான வீடுகளில் நடக்கும் இந்த நிலை... என் நெஞ்சை உலுய்பிய உலுப்புதலில் பிரவாகமானதுதான் இந்தக் கதை.

— தமிழ்ப்பிரியா. —

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பிடி வாற வரன்களை யெல்லாம் நீ வேண்டாம்.... வேண்டாம்.. என்று போட்டு.. எத்தனை வயது மட்டும் கன்னியாய் இருக்கப் போறாயடி? உன்ரை வயதிலை எனக்கு நீ பிறந்திட்டாய்...!"

அம்மாவின் சொற்கள் முழுமை பெற்றதோ இல்லையோ... சிலிர்த்துப் போனவளாய் அவசர அவசரமாக அம்மாவின் பக்கமாகத் திரும்பினாள் ஷியாமி.

"அப்பிடி எனக்கும் கலியாணமாகியிருந்தால்...... ஒரு பிள்ளையைப் பெற்று... முன்பு நீங்கள் செய்தீர்களே... அதே மாதிரி...... இப்போது பென்ஷன் எடுத்துக் கொண்டு ஓய்வாக இருக்கிற உங்களிடம் குழந்தையை வளர்க்கும்படி ஒப்படைத்து விட்டு.. 'நேரம் தவறாமல் லக்ரோசன் கரைத்துக் கொடுங்கோ அம்மா!' என்று ஞாபகப் படுத்திவிட்டு.. நான் வேலைக்குப் போய் வருவன். இல்லையே— அம்மா?" என்று திருப்பி அம்மாவைக் கேட்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

ஷியாமி தன் பிடிவாதத்தை விட்டு இறங்கி வரமாட்டாள் என்பது அம்மாவிற்குத் தெரியும். அதனால் தன் புலம்பலின் ஓய்விற்கு வந்து விட்டாள் அம்மா.

"இப்பிடியே எத்தனைவயது மட்டும் இருக்கப் போகிறாய் எண்டு பாப்பம்...!"

மெல்ல முணு முணுத்தபடி அறையை விட்டு வெளியில் போனாள் அம்மா.

ஷியாமியின் மனம் நிதானமில்லாமல் அலைந்து கொண்டிருந்தது. அம்மாவின் வார்த்தைகள் தூவிவிட்டுப் போன அலைச்சல் அது, அவளைத் துணைவியாக்கிக் கொள்ள வருபவர்களையெல்லாம்... ஏன் அவளுக்குப் பிடிக்காமல் போகின்றது? இப்படி எத்தனை நாளைக்கு அம்மாவின் புலம்பலைத் தாங்கிக் கொள்வது? நினைக்க நினைக்க சின்னச் சினப்பாய் வெறுப்பு மனதில் இழைவது போலிருந்தது ஷியாமிக்கு.

அந்த என்ஜினியரிடம்— நல்ல பதவி வகிக்கிற ஒருத்தி துணைவியாக வேண்டுமென அந்த மாப்பிள்ளையிடம் போய்......

"அழகான பெண்ணாய்... படித்த பெண்ணாய்... நாகரீகமான பெண்ணாய்... வேண்டும் என்று ஒருவன் ஆசைப்படுவதில் தப்பில்லை. ஆனால்......... உழைக்கின்ற ஒரு பெண் வேண்டுமென்றால்...... நீ ஒரு என்ஜினியர். ஆயிரக் கணக்கில் சம்பாதிப்பவன். உனக்கென்று வருகின்ற ஒருத்தியை — அவளோடு வாழ்ந்த வாழ்வின் பிணைப்பாய் இணைந்து வரும் அளவான குழந்தைகளை... உன் உழைப்பில் காப்பாற்ற முடியாமல்.. உழைக்கின்ற ஒரு பெண் துணைவியாக வேண்டும் எனத் தேடுகின்றாயோ...சே... வெட்கமாய் இல்லை ?" என்று கேட்க வேண்டும் போலிருந்தது ஷியாமிக்கு.

இம்மாத பரிசுக் கதை

"ஒரு வேளை இது ஒரு பாஷனோ? ஆமாம்! அப்படித்தான் இருக்க வேண்டும். இவ்வளவு சீதனம்..., இத்தனை (?) ஆயிரம் இனமாகத் தந்தார்கள்... என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வது போல்... 'என் மனைவி 'வேக்' பண்ணுகிறாள்.' என்று சொல்லிக் கொள்வதும் ஒரு பாஷன் போலும். அதனால் தான் இவர்கள் நினைத்த போது நெஞ்சில் அரும்பி நின்ற வெறுப்பு சற்று உயர்வது போலிருந்தது அவளுக்கு.

"இந்தப் பிரச்சனையை அம்மா இத்துடன் நிறுத்திக் கொள்வாளா?" என்ற கேள்வி மனதில் எட்டிப் பார்த்த போது கேள்வியையும் மிஞ்சி மனம் கசந்தது.

"என்னுள்ளே 'இப்பிடி' ஒரு எதிர்பார்ப்பு- பிடிவாதம் ஏற்படுவதற்கே நீங்கள் தானம்மா காரணம்...! என்று எப்படி அம்மாவிடம் அவள் போய் சொல்வது?

அவள் பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டாள்தான். படித்துப் பட்டம் பெற்று பதவியில்தான் இருக்கிறாள். ஆனால் .. அவள் குடும்ப வாழ்வில் பிணைக்கப்படும்போது...... இந்தப் பதவி உதறியெறியப் பட வேண்டும். இதுதான் அவளின் எதிர்பார்ப்பு.

இதை அம்மாவிடம் சொன்னால்... அதிர்ந்து போனவளாய்... வியப்போடு அவள் மீது பார்வையைப் பதித்து... பின்பு மெல்ல மெல்ல மனதில், விழிகளில் பரவுகின்ற வெம்மையோடு வார்த்தைகளைக் கொட்டி......

"உனக்குப் பயித்தியமேடி பிடித்திட்டுது. இந்தக் காலத்திலை வேலை பாக்காத பொம்பிளையள் ஆராவது இருக்கினமே! உனக்குப் புத்தியிருந்தால்... இந்தப் பெரிய பதவியை விடவேணும் என்று சொல்லுவியே? ஏன்? நான் வேலை பார்த்துக் கொண்டு... கணவன்... குழந்தைகள் என்று குடும்பம் நடத்தேல்லையே?" என்றபடி அவள் தோள்களைப் பிடித்து உலுக்குவாள்.

சட்டென்று ஷியாமியின் பொறுமையும் மனதை விட்டு விலகிக் கொள்ள... "நீங்கள் வேலை பாத்துக்கொண்டு குடும்பம் நடத்தின லட்சணம் எல்லாம் எனக்குத் தெரியுமம்மா. அது ஆக என்னைப் போன்ற மனம் படைத்தவர்களை மட்டும்தான் பாதிக்கும்....!" என்று அவளும் பதிலுக்குக் கத்த... இதெல்லாம் நடக்கத்தான் வேண்டுமா?

பிறந்த மறுமாதமே அவளை அம்மம்மாவின் பராமரிப்பில் விட்டு விட்டு அம்மா ஆபீஸிற்குப் போகத் தொடங்கிய போதோ ... அதன் பின்பு நகர்ந்த சில வருஷங்கள் வரையோ...... ஷியாமியின் நெஞ்சில் அந்த ஏக்கம் நிழல் விரித்தது கிடையாது. ஆரம்ப வகுப்பில்... சின்னப் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தபோதுதான்....... .. வகுப்பில் தன்போன்ற சின்னப் பிள்ளைகளோடு பழகிய போது தான்... மெல்ல மெல்ல மனம் ஏக்கத்தில் கசிய ஆரம்பித்தது.

“எனக்கு அம்மாதான் தலையிழுத்து ரிபண் கட்டி விடுகிறவா...!” என்று மற்றச் சிறுமிகள் பெருமையோடு சொல்லும் போது...

“எனக்கு அம்மம்மா தான் எந்த நாளும் தலையிழுத்து ரிபண் கட்டி விடுகிறவா...!” என்று பதிலுக்குப் பதில் ஷியாமி சொன்னாலும்... மற்றவர்களைப் போல் தன்னாலும் சொல்ல முடியவில்லையே...... என்று மனதிற்குள் பெரிய ஏமாற்றமாக இருக்கும்.

“ஷியாமி!... இண்டைக்கு உம்முடைய பொட்டு சொத்தியாய் — பெரிசாய் இருக்குதணை. எனக்கு எங்களின்ரை அம்மா சின்னப் பொட்டாய் வடிவாய் வைத்திருக்கிறாரும்...!” என்று ஒரு நாள் வகுப்பில் யாமினி என்ற சிறுமி சொன்ன போது .. ஆற்றாமையில் ஷியாமிக்கு கோபம் வந்து விட்டது.

“எனக்கும் அம்மா பொட்டு வைத்து விட்டால் வடிவாய் வைத்து விடுவாவணை. உங்களின்ரை அம்மா மாதிரியே என்னுடைய அம்மாவும்? என்ரை அம்மா உத்தியோகம் பார்க்கிறா. தெரியுமே?” என்று விட்டுக் கொடுக்காமல் ஷியாமி- யாமினிக்குப் பதில் சொன்னாலும்... அழுகை விம்மிக் கொண்டு வந்தது.

மத்தியானம் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாய் கண்ணாடியில் ஓடிப்போய் தன் முகத்தைப் பார்த்தாள் ஷியாமி. யாமினி சொன்னது போல் பொட்டு சொத்தியாய் பெரிதாகத்தானிருந்தது.

“பிள்ளை ஷியாமி. சாப்பிட வா மேனை......!” என்று அம்மம்மா அவளைக் கூப்பிட்ட போது......

“...மாட்டன். நான் சாப்பிட வர மாட்டன். நீ ஏன் எனக்குப் பொட்டு சொத்தியாய் வைச்சு விட்டனீ. என்னை யாமினி பகிடி பண்ணினவள். இண்டைக்கு நான் சாப்பிட மாட்டன்......!” என்று பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள்.

“அதுக்கு ஏன் ராசாத்தி இப்படி அழுகிறாய்? வயதான காலத்திலை எனக்கு கை நடுங்கும் தானே. சரி... இனிமேல் நான் சின்னப் பொட்டாய், நேராக வைத்து விடுகிறன். இப்ப நீ நல்ல பிள்ளை மாதிரி வந்து சாப்பிடுமேனை...!”

16 வயது மாணவி ஒருத்திக்கு பயங்கரமான தலை வலி ஏற்பட்டது. அடிக்கடி ஏற்பட்ட அத்தலைவலியை மருந்துகளால் நிறுத்த முடியவில்லை. கீஸ் லெர் ஏர்ஃபோர்ஸ் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் அவளை பரிசோதித்தார்கள். தலை வலிக்கு காரணம் என்ன தெரியுமா? — Eye Shadow எனும் ‘மேக் அப்’ பொருளாம். — சயன்ஸ்ருடே.

என்று அம்மம்மா அவளைச் சமாதானப் படுத்திச் சாப்பிட வைத்தது இன்னமும் ஷியாமிக்கு நல்ல ஞாபகமிருக்கிறது.

இப்படி எத்தனையோ விதம் விதமான ஏக்கங்களின் விதைப்போடு காலம் மெல்ல நழுவிக் கொண்டிருந்தது. அவள் இரண்டாம் வகுப்புப் படிக்க ஆரம்பித்ததும் தன் தேவைகள் எல்லாவற்றையும் தானே செய்து கொண்டாள். தானே தலையிழுத்துக் கிளிப் மாட்டி..., பொட்டு வைத்துக் கொண்டு ஸ்கூலுக்குப் போவாள். இடையிடையே எப்போதாவது பாடங்கள் விளங்காவிட்டால் அப்பாவிடம் தான் கேட்பாள். அம்மாவிடம் போக மனம் வரமாட்டாது.

நாட்கள் நகர நகர......— வயது உயர உயர...... அவள் நினைவு தெளிய ஆரம்பித்தது. நடக்கின்ற ஒவ்வொன்றையும் நிதானமாக சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்தாள் ஷியாமி.

காலையில் அம்மாவிற்கு உதவியாக சின்னச் சின்ன வேலைகளைச் செய்து கொடுத்துக் கொண்டே அம்மா படும் பரபரப்பைப் பார்த்து மனதிற்குள் அனுதாபத்தோடு சிரித்துக் கொள்வாள்.

அம்மாவிற்கும் ஆபீஸிற்குப் போகின்ற அவசரம். அப்பாவிற்கும் ஆபீஸிற்குப் போகின்ற அவசரம். அவளுக்கும் ஸ்கூலுக்குப் போகின்ற அவசரம். யாரை யார் கவனிப்பது?

“என்னப்பா! எனக்கும் சாப்பாடு போட்டு வைத்திருக்கிறீரோ?” என்று அப்பா அம்மாவிடம் கேட்க மாட்டார். ஏனென்றால்...... அம்மாவும் உழைப்பவள். அவளுக்கும் ஆபீஸ் போகின்ற அவசரம். அதனால்... தானே சமையலறையினுள் வந்து வேண்டியதைப் போட்டுச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்.

“எப்பிடியிருக்குது சாப்பாடு? இன்னும் கொஞ்சம் போடட்டே?” என்று அப்பாவை அக்கறையாகக் கவனிக்க அம்மாவிற்கு அவகாசம் கிடைக்காது. அவர் எதை விரும்பிச் சாப்பிடுகிறார் என மேலும் போட்டுக் கொடுத்துச் சாப்பிடச் சொல்ல அம்மாவிற்கு நேரமிருக்காது.

“ஷியாமி! நீயும் வா சாப்பிட. நான் போட்டுத் தாறன்......!” என்று அவளை அழைப்பதற்கும் அம்மாவிற்கு நேரமிருக்காது.

முடிந்தும் முடியாத வேலைகளை அம்மம்மாவின் கையில் ஒப்படைத்து விட்டு... ஷியாமிக்குக் கீழேயுள்ள இரண்டு தம்பிமாரையும் கவனிக்கும் பொறுப்பையும் ஒப்படைத்து விட்டு...... வேலைக்காரிக்கும் செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஓடர் போட்டபடி...... அலங்கரித்து...... ஏழுமணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு ஆபீஸிற்கு கிளம்பும் வரை ஒவ்வொரு செய்கையிலும் அவசரம்..... அவசரம் என்று பறந்து கொண்டிருப்பாள் அம்மா.

"சரிவரச் சாப்பிடக் கூட நேரமில்லாமல் — கணவனைக், குழந்தைகளை சரிவரக் கவனிக்க முடியாமல்... இது என்னம்மா உழைப்பு? மறறவர்களை விடு நீ சாப்பிட— உன்னைக் கவனிக்க உனக்கே நேரமில்லா விட்டால்...... பிறகே னம்மா இந்த உழைப்பு? என்னத்திற்காக?" என்று அம்மாவிடம் கேட்க வேண்டும் போல இருக்கும் ஷியாமிக்கு.

பக்கத்து வீட்டுக் கமலா மாமி இப்போதும் கூட புது மணத் தம்பதிகள் மாதிரி...... கணேஷ் மாமா ஆபீஸிற்குக் கிளம்பும் போது .. கேற்வரையில் வந்து வழியனுப்பிவைப் பாளே...... அதைப் பார்க்கும் போது மனதை மெல்ல நெருடுவது போல இருக்கும் ஷியாமிக்கு.

"அப்பா! இப்படியொரு சுகம் — ஒரு அனுபவம் உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா அப்பா?" என ஒரு நாளைக்கு அப்பாவிடம் கேட்க வேண்டும் போல் மனம் நினைத்துக் கொள்ளும்.

கமலா மாமியின் மூத்த மகள் பிரியா — ஷியாமியை விட இரண்டு வயது மூத்தவள். ஆனால்..... பிரியாவிற்கு இப் போதும் கூட கமலா மாமி தான் தலையிழுத்துப் பின்னி விடுவாள். உடுப்புகள் எல்லாம் தோய்த்து அயன் பண்ணிக் கொடுப்பாள். ஸ்கூலுக்கு பிள்ளைகள் புறப்படும் போது ..... வாசல் வரை வந்து பத்து முறை கவனம் சொல்லுவாள்.

"பள்ளிக்கூடம், ரியூசன் என்று பிள்ளைகளுக்கு படிக்கத்தான் நேரம் சரி. மற்ற எல்லாவற்றையும் நான்தான் கவனிக்க வேண்டியிருக்குது......!" என்று கமலா மாமி பெருமையோடு சொல்லும் போது...... ஷியாமியின் மனம் ஓசை சிந்தாமல் விம்மும்.

இந்த சுகத்தில் எது தனக்குக் கிடைத்தது என நினைத்துப் பார்ப்பாள் ஷியாமி. "பிரியா படிக்கிற அதே ஸ்கூலில்தானே மாமி நானும் படிக்கிறன். நானும் ரியூசனுக்குப் போறனுன் தானே. ஆனல்... .. என் தேவைகள் ஒவ்வொன்றையும் நான்தானே செய்துகொள்ளுறன். அந்த வகையில் பார்க்கப் போனல்.. ..உங்கள் பிரியாவை விட நான் கெட்டிக்காரி தானே......!" என ஆற்றாமையோடு சொல்ல வேண்டும் போல இருக்கும்.

ஆனல்.....அம்மாவின் பராமரிப்பு தனக்குக் கிடைக்கவில்லையே...... என நினைத்து நினைத்து ஏங்குவாளே தவிர... ஒருநாள் கூட அம்மாவை ஷியாமி நொந்தது கிடையாது. அம்மாவிற்கும் நேரம் இருந்தால்...... கமலா மாமி மாதிரி எல்லாம் செய்து தருவாள்..... என ஏங்கும் மனதைப் போலியாகச் சமாதானப் படுத்திக் கொள்வாள். உண்மையும் அது தான்.

"இந்தப் பேத்திக் கிழவி இறந்து போனதுக்கே இவள் இப்பிடி அழுகிறுள்?" என்று வினவுகின்ற திகைப்பான பார்வையாய் ... !

"உங்களைப் பொறுத்தவரை தான் அவள் எனக்குப் பேத்திக் கிழவி.. ஆனல் . .எனக்கு அவள் ஒரு தாய். பெற்றெடுத்த மறுமாதமே என்னை அவளின் கையில் ஒப்படைத்து விட்டு அம்மா உழைக்க ஓடின போது......... என்மீது அன்பையும் அரவணைப்பையும் கொட்டி .. ..-புட்டிப் பாலூட்டி என்னை வளர்த்தெடுத்த தாய் இவள் தான். இந்த அம்மம்மா இல்லா விட்டால்.........நான் ஒரு முழு அநாதையாகி.. ..யாரோ ஒருத்தியின் கையில்தான் வளர்ந்திருப்பேன். அந்த முழு அநாதைத் தன்மையை காப்பாற்றி என்னை வளர்த்தவள் இந்த அம்மம்மாதான்.........!"

இதை வாய்விட்டு மற்றவர்களுக்குச் சொல்ல விரும்பாமல்.. தனக்குள்ளேயே நினைத்து நினைத்து பெரிதாக அழுதாள் ஷியாமி.

## பேசாமடந்தை!

"பொம்பிளைக்கு முன்னலே ஆம்பிளை படிச்சிட்டான். புஸ்தகம் எழுத ஆரம்பிச்சுட்டான். நீ பதிவிரதையாக இருக்கணும் என்று சொல்லி அர்ச்சனை பண்ணி பட்டுப் புடவை நகைகள் எல்லாம் வாங்கி கொடுத்து நீபர தேவதை அவதாரம் என்று சொல்லி தாஜாபண்ணி விழுந்து கும்பிட்டு நீ என் நினைவாகவே இருக்கணும் தெரியும்ல? என்று சொல்லி வடை பாயாசம்போட்டு, குங்குமம் இட்டு, பூச்சூட்டி வாய்சிவக்க வெற்றிலை பாக்குப் போட்டுக்கச் சொல்லி வைச்சிருக்கிறுன். இத்தனை லஞ்சம் வாங்கிட்ட அப்புறமும் அது ஆடுமா? பேசாம இருக்கு."

('செம்பருந்தி' எனும் நூலிலிருந்து)
செல்வா. தம்பிஐயா - மண்டைதீவு

அவளுக்கு 17 வயதாக இருக்கும் போது ...காய்ச்சல் என இரண்டு நாள் படுக்கையில் படுத்த அம்மம்மா..... இறந்து போனபோதுதான்..... ஷியாமி மிகவும் துடித்துப் போய் விட்டாள். இந்தப் பேரிழப்பைத் தாங்க முடியாமல் வெந்து போய் ....... ஓவென்ற பெரிய குரலில் அம்மம்மாவின் உடல் மீது விழுந்து புரண்டு..... . புரண்டு அவள் கதறியதை .. அங்கே வந்திருந்த எல்லோரும் பிரமிப்போடு பார்த்தார்கள்.

நாட்கள் மிக வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. அவள் ஜி. ஸி. ஈ. உயர்வகுப்பில் படித்துக் கொண்டிருந்த வேளையது. அப்போதுதான் அப்பாவிற்கு திடீரென அந்த நோய் வந்து........... கொஸ்பிற்றலில் அட்மிட் பண்ண நேரிட்டது. ஷியாமி தவித்துப்போய் விட்டாள். மூன்று வாரங்களின் பின்பு...... ஓரளவு குணமான நிலையில் அப்பாவை வீட்டிற்குக் கொண்டுவந்த பின்புதான் ஷியாமியின் மனத்தவிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று தணிந்தது. ஆனாலும்...... இன்னமும் முறையான கவனிப்பு அப்பாவிற்கு வேண்டும் அப்போதுதான் அவரால் எழுந்து நடமாட முடியும்.

அம்மா மட்டுமல்ல......... அவளும் மூன்று வாரமாக ஸ்கூலுக்குப் போகவில்லை. அப்பா ஹொஸ்பிற்றலில் இருந்து வந்த மறுநாள் ஷியாமி ஸ்கூலுக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது.... ..... அடுத்த அறையில் அம்மா அப்பாவோடு பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் திகைத்துப் போய் விட்டாள்.

"மத்தியானச் சாப்பாட்டையும் இந்த மேசையிலேயே வைத்திருக்கிறன். நேரத்திற்கு சாப்பிடுங்கோ. ஹார்லிக்ஸ் கரைத்து பிளாஸில் ஊற்றி வைத்திருக்கிறன். மறந்திடாமல் எடுத்துக் குடியுங்கோ. மருந்தையும் நேரம் தவறாமல் போட்டுக் கொள்ளுங்கோ. .."

அம்மா ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு போனாள். அப்பா மறுவார்த்தை சொல்லாமல் உம் உம்.....போட்டுக் கொண்டிருந்தார். ஓ அம்மாவும் ஆபீஸிற்குப் போகப் போகிறாளா?

கேட்டுக் கொண்டிருந்த ஷியாமிக்கு ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது. "இந்த நிலையில் அப்பாவை விட்டு விட்டு வேலைக்குப் போகவேண்டும் என நினைக்கக்கூட உன்னால் எப்படியம்மா முடிந்தது? அப்பாவைவிட — உன் குங்குமத்திற்கும் தாலிக்கும் நடக்கிற இந்தப் போராட்டத்தை விட.... பார்க்கிற வேலைதான் உனக்குப் பெரிதாகப் போய் விட்டதா அம்மா?" என்று கத்த வேண்டும் போலிருந்தது.

மனத்துள் எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு நிதானமாக ஒரு நிமிஷம் சிந்தித்தபோது......எழுந்த ஆத்திரம் மள மள வென்று மனதை விட்டு இறங்க ஆரம்பித்தது. அம்மா மீது அனுதாபமாய் நினைவுகள் பதிந்து கொண்டது.

பாவம் அம்மா. மூன்று வாரம் தொடர்பாக லீவு எடுத்து விட்டார். இனி லீவு எடுக்க முடியாது. வாங்குகின்ற சம்பளத்திற்கு அங்கேயும் கடமை செய்துதானே ஆக வேண்டும். அதற்காகத்தான் அம்மா ஓடுகின்றாள். அதில் தவறில்லை. ஆனால்...... இங்கே அப்பாவின் கடமை? அதற்கென்ன செய்வது? ஒரு கடமையை இழந்துதான் இன்னொரு கடமையை நிறைவேற்ற வேண்டும். ஒரு குடும்பத்தலைவி உத்தியோகம் பார்க்கிற அழகே இதுதான். சம்பாதிக்கிற ஒரு கடமையை நிறைவேற்றுவதற்காக..... அவளின் பராமரிப்பில் மட்டும் நிறைவேற்ற வேண்டிய வீட்டுக் கடமைகளுக்கு இன்னொரு துணை தேவைப்படுகிறது.

"அப்பாவை இந்த நிலையில் விட்டிட்டு எப்படிப் போவது? என்ன செய்யலாம்?" சில நிமிஷங்கள் வரை மௌனமாக இருந்து சிந்தித்தாள் ஷியாமி. விடை சட்டென்று சிந்தனையில் மிதந்து வந்தது. ஸ்கூலுக்குப் போவதற்கென்று போட்ட வைற் யூனிபோமை கழற்றி விட்டு வேறு உடை மாற்றிக் கொண்டு நேராக அப்பாவிடம் வந்தாள்.

"எழுந்து நடக்க முடியாமல் கஷ்டப் படுகிற உங்களை இந்த நிலையில் விட்டிட்டு..... எப்படியப்பா ஸ்கூலுக்குப் போறது?" தாழ்ந்து போன குரலில் மிக மெதுவாகச் சொன்னாள் ஷியாமி.

அவர் திகைப்போடு அவளை நிமிர்ந்து பார்த்தார். "உனக்குப் பரீட்சைக்கு இன்னமும் இரண்டு மாதம்தானே இருக்குது ஷிமாமி ..!"

"அது எனக்குத் தெரியும் அப்பா. இந்தப் பரீட்சையில் பெயில் விட்டால்...... அடுத்த முறை நன்றாக — கவனமாகப் படித்துப் பாஸ் பண்ணி விடலாம். ஆனால்... திரும்பவும் உங்களுக்கு சுகவீனம் வந்து . ஏதாவது நடந்தால் .... எனக்கொரு அப்பாவை எங்குமே என்னால் தேட முடியாதப்பா..........!" அவள் குரல் அவளையும் மீறிக் கொண்டு தளதளத்தது.

"என் ஷியாமிக் குஞ்சு...!" அருகில் இருந்த அவளை அப்படியே அணைத்துக் கொண்டு அழுதே விட்டார் அப்பா.

ஷியாமி பதறிப் போனவளாய் அப்பாவின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். "இப்போதாவது உங்களுக்குப் புரிகிறதா அப்பா...! ஒரு குடும்பத்தலைவி உழைக்கப் போனால்..... குழந்தைகள் மட்டுமல்ல கணவன் கூட அநாதை மாதிரித்தான் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்பது தெரிகிறதா அப்பா?" என்று கேட்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

அப்பாவைப் பார்க்கவே அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. "அப்பா! இன்று பெண்கள் வகிக்காத பதவிகளே இல்லை எனலாம். அந்த வகையில் அவர்கள் கெட்டிக்காரிகள் திறமைசாலிகள்தான் அதற்காகப் பெருமைப்படத்தான் வேணும். ஆனால்........ இல்லத்தலைவியாகிய பின்பு. பெற்ற குழந்தைகளை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு..... உழைப்பதற்காக ஓடும்போது தாயிருந்தும் அவளின் அரவணைப்பில்லாமல் அநாதைகள் மாதிரி குழந்தைகள் வளர்கிறார்களே...... அதே மாதிரித்தான்- அந்த அநாதைக் குழந்தைகள் மாதிரித்தான்....— மனைவியிருந்தும் அவளின் பராமரிப்பில்லாத அநாதைக் கணவன் நீங்கள். ஒரு வேளை இது உங்கள் மனதைப் பாதிக்காமல் இருக்கலாம் அப்பா ஆனால் ... இது என் நெஞ்சில் ஒரு பெரிய இழப்பாய் — மறக்க முடியாத இழப்பாய் . நிலைத்து நிற்கிறது அப்பா ...!"

என சொல்ல வேண்டும் என மனதிற்குள் நினைத்த வார்த்தைகளை சொல்லாமலேயே எழுந்து வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள் ஷியாமி.

"அன்றுதான் அவள் மனத்தில் இப்படியொரு பிடிவாதம் நிலையாக வேரூன்றியது. அவள் ஏங்கிய ஏக்கங்களை — இழந்த இழப்புகளை அவள் பெற்றெடுக்கும் குழந்தைகள் அனுபவிக்கக் கூடாது. கூடவே கூடாது...!"

............................................

அட்டையில்...

**அடுத்த இதழில் பிரசுரமாக விருக்கும் 'அக்கினிக் குஞ்சுகள்' சிறுகதைக்கான படமே இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கிறது.**

............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ ✦ ✦

புரண்ட பழைய நினைவுகளில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டு மீண்டும்... ''அம்மாவின் புலம்பலுக்கு என்ன பதில் சொல்லுவது?'' என்று சிந்தித்தபடி அப்படியே உறங்கிப் போனாள் ஷியாமி.

காலையில் அவள் ஆபீஸிற்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது... மீண்டும் அம்மா அவள் முன்னால் வந்து அந்தக் கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

''சொல்லிப் போட்டு போ ஷியாமி. மாப்பிளை பகுதிக்கு என்ன முடிவைச் சொல்லுறது?''

''பொம்பிளைக்கு அந்த என்ஜினியர் மாப்பிளையைப் பிடிக்கேல்லையாம்...... என்று சொல்லுங்கோ அம்மா. ஏனென்றால்...... அவனுக்கு உழைக்கிற ஒரு பொம்பிளை தான் மனைவியாகவேணுமாம். கலியாணத்திற்குப் பிறகு வேலை பார்க்கிற எண்ணம் எனக்குக் கிடையாது. நீங்கள் செய்தது மாதிரி நானும் பிள்ளைகளைப் பெற்று 'புட்டிப்பாலைக் கொடுத்து வளர்த்துத்தாங்கோ அம்மா......!'' என்று என்ரை பிள்ளையளை உங்களின்ரை கையிலை ஒப்படைத்து விட்டு நான் வேலைக்குப் போகமாட்டன் அம்மா. தாயின் முழுமையான அரவணைப்பை நான் இழந்தது மாதிரி...... மனதிற்குள் வெந்து வெந்து ஏங்கினது மாதிரி... என்ரை பிள்ளையளும் ஏங்க வேண்டாம். என் எதிர்பார்ப்பை ஏற்கக் கூடிய ஒருவனை தேட முடியுமானால் தேடுங்கோ. இல்லாவிட்டால்.. நான் இப்படியே உழைத்துக் கொண்டிருக்கிறன்...!''

நிதானமாக அம்மாவை நிமிர்ந்து பார்த்து அழுத்தமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள் ஷியாமி. அம்மா பிரமை பிடித்தவள் போல் அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

[யாவும் கற்பனையே]

# தேனைச் சுற்றி கொட்டும் தேனிகள்

**— முல்லையூரான் —**

என் நேசமண்ணே
ஒருமுறை முழித்துப்பார்.
என் நேசமண்ணே
ஒருமுறை முழித்துப்பார்

நீ தூங்குவது
பஞ்சணையல்ல, பாம்புப்புற்றுகள்

இனிக்குமென வாயிலிட்டது
கற்கண்டுகளல்லடா.
கைக்குண்டுகள்.

உன் மார்பில் நெளிவது
பூமாலைகளல்ல பூநாகங்கள்,

என் நேசமண்ணே
ஒருமுறை முழித்துப்பார்.

காண்டீபங்களிலிருந்து
புறப்பட்ட அம்புகள்
எங்கள் அர்ச்சுனரையே
குத்துமென நினைத்தோமா?
மண்ணே ஒருமுறை விழி!

எந்த உல்லாசப் பறவைகளின்
பொற்சிறகு முறிய வில்லை
நீ முழித்து நிமிர்ந்துதற்கு.
சரிந்தன எல்லாமே
கண்ணனது போர்த்தேர்கள்,

வைகாசி நாளில்
எழுவீசு சோழகங்கள்
உன்துயிலை தாலாட்டவல்ல
வீசுகிறது.
உன் விழிப்பு நடைகாண
போர்முரச மறைகிறது.

என் நேசமண்ணே
காதில் விழவில்லையா
ஒருமுறையேனும் விழித்துப்
பார்.

எங்கள் தலைகள் சூடும்
காட்போட் முடிகள் கழரும்
போது

பொன் முடி புனைய
கைகள் வேண்டுமே
என் நேசமண்ணே முழித்துப்
பார்.

அன்று — நீ
மேற்கில் தொலைத்தது
மாலை மினுக்கன்கள் மட்டு
மல்ல
உன் சந்தோசங்களும் தான்
நாளை — விடியவும்
கிழக்கே வரப்போவதும்
விடி வெள்ளிகள் மட்டுமல்ல
உன் விடிவுகளும் தான்.

நீ முழிக்கவேண்டிய பகலில்
தூங்குகிறாய்,
தூங்கவேண்டிய இரவில்
முழிக்க வேண்டிவரும்.
என் நேசமண்ணே
ஒருமுறை முழித்துப்பார்,

இத்தனை இருளில்
எத்தனை வெள்ளிகள்
பூக்குமோ?
அத்தனை வெளிச்சங்கள்
வந்தே தீரும்.
வாக்களிக்கப்பட்டுவிட்ட
என் நேசமண்ணே
நீ முழித்தே ஆகவேண்டும்.

---

லண்டன் மாநகரத்து வியாபாரி ஒருவரின் மனைவி நீதி மன்றத்தில் விவாகரத்துக் கோரினார். காரணம், ''தன் கணவர், காலில் கிசு கிசு மூட்டி விட்டார்'' என்பதே.

கணவர் வாதாடினார்.

''நான் கிசு கிசு கிசு மூட்டியது உண்மை. அவள் அதனால்தான் சிரித்து விட்டாளே! சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் அறிகுறி அல்லவா? அது எப்படி துன்புறுத்தலாகும்?'' என்றார்.

அதற்கு நீதிபதியின் தீர்ப்பு;'' கிசு கிசு மூட்டினால் தானே இயங்கவல்ல சதைகளால் ஏற்பட்ட, முக அசைவு தான் அந்தச் சிரிப்பு. அது மன நிறைவையோ, உள மகிழ்ச்சியையோ காட்டுவதாகாது. மனைவியின் விருப்பத்திற்கெதிராகச் செய்வதெல்லாம் துன்பம் தருவதுதான்''

பின்னர் என்ன கணவனும் மனைவியும் பிரிக்கப்பட்டனர் - இந்த ''கிசு கிசு'' வால்.

தகவல்:- அளவத்துகொடை காந்திமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## O அ. செ. மு O

எழுத்தொன்று செயலொன்ருக அன்றி எழுத்தாளனுகவே வாழ்ந்து கொண்டிருப்பவர் பழம் பெரும் எழுத்தாளர் அ செ. முருகானந்தம். ஏராளமாக எழுதிக் குவித்ததோடன்றி பத்திரிகையாளராயும் இருந்த அந்த அ. செ. மு இப்போதெல்லாம் எழுதவே முடியாது படுத்த படுக்கையில் 'ஆஸ்மா' நோயினுல் அவதியுறுகிருர்.

எழுத்தையே மணம் செய்து எழுத்தையே நம்பி வாழ்ந்த அ செ மு இப்போ நோயால் மட்டுமன்றி; பெற்ற தாயோடு வறுமையிலும் வாடுகிருர். எதற்கெதற்கோ நிதி சேர்த்தும், வாய்கிழிய இலக்கியம் பேசியும் திரிவோர் இலக்கியத்திற்காகவே வாழ்ந்த இந்த முன்னேடி இலக்கியவாதிக்காக மனமிரங்கி முன்மாதிரியாக நடந்து கொள்ளமாட்டார்களா ?

## O வகவம் O

புனை கதை இலக்கிய துறைக்கு தகவம் எவ்வாறு சிந்தனை சாதனைகளுடன் சேவையாற்றி வருகிறதோ; அதுபோல கவித்துறைக்கு வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டம் சேவை ஆற்ற ஆரம்பித்துள்ளது. ஈழத்தில் வெளியாகிவரும் கவித்தொகுப்புகளை விமர்சித்து கவிஞர்களை ஊக்குவித்தும்; பௌர்ணமி தோறும் கவி அரங்கு மூலம் இளங்கவிகளை இனங்காட்டியும் வரும் வகவம் பத்திரிகை மாசிகைகளில் பிரசுரமாகி வரும் கவிதைகளை மாதாந்த ரீதியில் மதிப்பிட்டு பரிசில்கள் வழங்கியும் வருமானுல் இளம் கவிகட்கு அது மிகவும் வரப்பிரசாதமாக அமையும்!

## O தாமரைச் செல்வி O

சுமைகள் நாவலை எழுதிய தாமரைச் செல்வி பெண் பிரமாக்களிடையே குறுகிய காலத்துள் ஓர் நிறைவான இடத்தைப் பெற்றவர். 1974ல் கேசரியில் பிரசுரமான ''ஒரு கோபுரம் சரிகிறது'' சிறுகதையைத் தொடர்ந்து வந்த இவரது 35 கதைகளுள் பெரும்பாலானவை கேசரியிலேயே பிரசுரமாகியிருக்கின்றன. நாவல் சிறுகதை தவிர சித்திரம் வரைவதிலும் மிக மிக ஆர்வம் மிக்க இவரது சித்திரக் கதைகள் சித்திரா குங்குமம் முதலான சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன.

வீரகேசரி புத்தக வெளியீட்டு நிறுவனம் முன்போல புத்தகங்கள் வெளியிடாதது எழுத்தாளர்களுக்கு மகத்தான இழப்பு! மன வருத்தத்திற்குரியது! எனக்குறைப்பட்டுக் கொள்ளும் தாமரைச் செல்வி எழுதாது ஒதுங்கியுள்ளவர்களும் எழுத முன்வரவேண்டும் என இலக்கிய சோலை மூலம் வேண்டுதல் விடுகிருர்!

## O போலி 'மேகங்கள்' O

வளர்ந்து வரும் உங்களுக்கு ஈழத்து இலக்கிய வாதிகளின் ஆதரவு எந்தளவு இருந்து வருகிறது என இரு திங்கள் சஞ்சிகை ஆசிரியர் ஒருவரிடம் வினவியபோது பதில் இவ்வாறு கிடைத்தது! ''ஓசியில் கிடைத்த சஞ்சிகைகளில் அதன் அட்ரஸ்சைப் பார்த்து ஆசிரியருக்குத் தன் கதையைப் பிரசுரிக்குமாறு வலியுறுத்திக் கடிதம் எழுதிவிட்டு; சஞ்சிகை வெளிவந்தபின் எந்த வித ஆதரவையும் நல்காது ஈழத்தின் மூலை முடுக்கு எங்கும் வெளிவரும் சிறுசஞ்சிகைகளிலும் என் கதை பிரசுரமாகியுள்ளது எனப் பெரிதாக தம்பட்டமடித்துத் திரியும் இலக்கிய 'காவலர்'கள் உள்ளவரை; ஈழத்து சஞ்சிகை உலகு போலி 'மேகத்தால்' தான் சூழப்பட்டிருக்கும். அதற்கு புத்தொளி கிடைக்காது!

## O வேல் அமுதன் O

தகவம் செயலாளராய் சேவையாற்றும் வேல் அமுதன் இணையற்ற இலக்கிய அபிமானி என்பது நாடே அறிந்தது! ஆனுல் அவர் ஒரு கதைஞர், நாடக ஆசிரியர் என்பது பலர் அறியாதது. இவர் எழுதிய 'வாழும் வழி' 'அறுவடை'; ஆகிய இரு நாடகத் தொகுப்பை வெளியிட்ட வேல் நூல் வெளியீட்டு நிறுவனம் இவரது சிறுகதைகளைத் தொகுத்து 'வைகறை' 'மாரீசம்'; என இரு தலைப்புகளில் சிறுகதைத் தொகுப்பாகவும் வெளியிட்டுள்ளது! விரைவில் வேறு நாடகம் ஒன்றையும் எழுதவுள்ளார் வேல் அமுதன் அவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியமானவள்

## குறுங்காவியம்

### அனலை - ஆறு - இராசேந்திரம்

“வாயைத் திறந்து சொல்லிடு” மீண்டும்
பேயாய் இரைந்து கேட்டனள் அன்னை -
“மீண்டும் எனக்கு மணமோ... வேண்டாம்
ஆண்டவன் என்னை விட்டிடான் சும்மா”
மைந்தனின் சொற்கள் சிந்தையிற் பாய்ந்து
விந்தையாய்த் தோன்ற விழித்தனள் அன்னை.
“என்னடா சொன்னுய் விளங்குதே இல்லை
பண்ணிடு யாவும் பார்க்கலாம்” என்ருள்.
“வளரும் பருவ உணர்வுகள் உந்த
புனிதா என்னும் புதுமலர் தன்னை
நனிதே மோந்து நடுத்தெரு எறிந்து
மாளாக் கொடுமை செய்தேன் அறிவீர்
நாணம் குறுக்கே நற்றிரை போட
பெற்றவர் நீங்கள் பொய்யுரை தூண்ட
குற்றம் மறுத்துக் குறையிலா திருந்தேன்.
ஆண்டுகள் ஐந்தாய் நின் மகன் பிழையால்
கூண்டுறை கிளியாய்ச் சோர்கிருள் புனிதா.
கையிலே மகனை வைத்திடும் அவளை
பையனின் தந்தை யார் எனில் நாளும்
கண்ணீர் மலர்களே விடையெனக் காட்டுருள்
ஏழையர் சொட்டும் கண்ணீர்த் துளிகள்
நாளைய வாழ்வை அறுத்திடும் வாள்கள்
கன்னியர் விழி நீர் புவியிடை வீழின்
காசினி அழியும் காலமே காட்டும்
நாளெலாம் அந்த நளிர்மயில் கோலம்
வாளான் அறுத்து வதைக்குதே உள்ளம்
“அப்பா” என்று அழும் என் மதலை
செப்பிடும் மழலை சிந்தையில் மோதுது.
தப்புகள் புரிந்தும் திருந்தா மனிதன்
இப்புவி பிறந்து யாதுதான் லாபம்
ஆதலால் அன்னுய் நின்னடி தொழுதேன்

ஆதலால் அன்னுய் நின்னடி தொழுதேன்
தீதிலாள் புனிதா திருக்கரம் பற்றி
மேதினி வாழ ஆவன செய்க
ஒன்றை மட்டும் நன்றே உரைப்பேன்
ஒண்மயில் புனிதா கிடைத்திடா ளென்னில்
மண்ணில் மங்கையர் காதலே வேண்டேன்''
புண்ணர் இதய அடித்தளத்திருந்து
தண்ணர் மகனர் கழறிய வார்த்தை
கண்ணிடை மண்ணுய் வீழ்ந்தது அவட்கே.
அதன் பின்......
மனத்தை மாற்றி மகனைத் தாங்கள்
நினைத்த வழிக்கு இழுத்திட நாளும்
அழுது குளறி அன்பு கலந்து
குழைத்து ஊட்டிய வார்த்தைக் கனிகள்
உண்பாரின்றி ஊத்தைகளென்ன
குப்பைக் கிடங்கைச் சென்றே அடைந்தன

(வேறு)

மங்கையை எண்ணி நாளும்
மனதுடல் ஒடிந்து மைந்தன்
பங்கமாய்ப் போதல் கண்டு
பதைத்தனர் பெற்றோர் அன்றே
தங்கமாம் குணம் படைத்த
தகுதிசால் ஆசான் நாமம்
அங்கையர்க்கது வுரைந்து
அனுப்பினர் புனிதா வீடு.

அங்கையர் வந்து சொன்ன
அமுதமாம் மொழிகள் கேட்டு
செங்கனி துய்க்கும் அன்புச்
சிறர் எனச் சிந்தை பொங்கி
தங்களை மறந்து தையோ
ததிங்கிண என்று ஆடி
இங்கிதம் உற்றர் பெற்றோர்
இன்மகள் வாழ்வை எண்ணி.

காரிருள் ககனமெங்கும்
கருமை சால் மேக மூட்டம்
ஆர்த்திடும் அலைகள் ஆங்கே
அலைவுறும் கப்ப லொன்று
தேர்ந்திடத் திசை விளங்கா
தேங்கியே நிற்கும் காலை
பேரொளி ஒன்று பாதை
காட்டிடக் கண்டார் போன்று

அங்கையர் புனிதா தன்னை
அன்புற அருகழைத்து
"கங்குலாய்க் கழிந்த காலம்
கடந்ததாய் இருந்திடட்டும்
மங்குதல் வாழ்வில் மீண்டும்
மலர்ச்சியைக் காணல் யாவும்
எங்களின் பொறுப்பு அல்ல
எல்லாமே அவனின் ஆடல்

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மார்கழி மாதத்து மயிர் நனையாத் தூற்றல். பொழுது புலர்ந்து இருள் மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தது. புள்ளினங்கள் அந்த இனிய காலையை மகிழ்ச்சியுடன் வரவேற்கையில்; எல்லோருக்கும் இனியதான அந்தக் காலையில் சரஸ் மட்டும் ''ஏன் தான் இந்தப் பொழுது விடிகின்றதோ''? என்று அங்கலாய்க்கவே செய்தாள்.

அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் வாயில் விழுந்து கரித்துக்கொண்டிருந்தது. அந்தக் கண்ணீர் ஈரவிறகின் புகையாக் எழுந்ததா? அல்லது அவளது மனதின் புகைச்சலால் கசிந்ததா? அவளுக்கே அனுமானிக்க முடியவில்லை. குசினி முழுவதையும் புகை மண்டலம் தன்னகத்தே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

''வாயும் வயிறுமாய் இருக்கிறாய்! நீயேன் பிள்ளை புகையடுப்பை ஊதிக்கொண்டிருக்கிறாய். தாழ்வாரத்தில் கிடக்கிற தென்னோலையை எண்டாலும் எடுத்துக்கொண்டுவந்து அடுப்புக்குள்ள வையேன். மழைக்கிந்த விறகெல்லாம் நனைஞ்சு போச்சுதாக்கும்...'' என்று சொல்லிக்கொண்டுவந்து நின்றாள் பாலாக்கா,

இவர்கள் குடியிருக்கும் இந்த வீட்டின் சொந்தக்காரி பாலாக்கா பெயர் என்னவோ பாலாம்பிகைதான். ஆனால் ஊரார் வாயில் பாலாக்கா என்றால் தான் தெரியும். பெயரை உச்சரிக்கும்போதே அவள் பாரிய உருவம் நினைவில் வந்து நிற்கும் அளவுக்கு பிரமாண்டமான உடலமைப்பு அவளுடையது.

அடுப்புப் பற்றியதோஎன்னவோ...ஆனால் சரசின்உள்ளமெல்லாம் வெந்தணலாய் பற்றி எரிந்தது. ஏன் எரியாது? ஈன இரக்கமில்லாத பிறவிகள் பணத்தின் மேல் படுத்துப் புரள்கின்ற பாலாக்கா போன்றோர் வீட்டு வாடகைப் பணம் ரூபாய் ஐம்பதிற்காக விடியற்காலையிலேயே வீட்டு வாசலில் வந்து நிற்பதென்றால்...! பற்றாதா என்ன?

''பாஸ்கரன் எங்க பிள்ளை போட்டான். வெள்ளனக் காத்தாலே எண்டாலும் பக்கத்தில நிண்டு உதவி கிதவி செய்யாம எங்க வெளிக்கிட்டிட்டான்?'' தான் மிகவும் கரிசனையாய் கேட்பதாக எண்ணிக்கொண்டாள் பாலாக்கா.

''அவர் உந்தக் கோயில் கிணத்தில நல்ல தண்ணி அள்ளி வரப் போட்டார்.

''அது சரி, வாடகைக் காசு தர்ற யோசனை இல்லைப் போல உங்களுக்கு! அடுத்த மாசம் வேற வரப் போகுது. பாஸ்கரன் வந்த உடன சொல்லி காசை வாங்கித் தந்து போடு. ஏலாட்டிப் போனா நான் என்ன செய்யிறது. வேறே ஆட்களுக்கெண்டாலும் வீட்டைக் கொடுத்திட்டுப் போறன். உங்களுக்கென்ன தங்குமடமே கட்டிவைச்சிருக்கிறன். வேற யாருக்கும் கொடுக்கிற தெண்டாலும் இப்ப எழுபத்தைஞ்சு, எண்பது ரூபாய்க்குக் கொடுக்கலாம்...''- பொரிந்து தள்ளிக்கொண்டிருந்தாள் பாலாக்கா. அந்த நேரத்தில் தண்ணீர்க்குடத்துடன் வந்து கொண்டிருந்த பாஸ்கரன் தலையைக் குனிந்த வண்ணம் குசினிக்குள் நுழைந்தான். பரிதாபமாகக் கணவனின் முகத்தை நோக்கிய சரஸ் பொங்கி வரும் கண்ணீரை மறைப்பதற்காக அடுப்பை நோக்கிக் குனிந்தாள்?

'மனிதனுக்கு வறுமையும், பசியும் வரலாம். ஆனால் அந்த நிலையிலும் பசியோடும், வறுமையோடும் மனிதனாக வாழ வேண்டுமே தவிர எதையும், எங்கேயும் தேடும் தெருநாயாகிவிடக்கூடாது; மனிதனின் பசிவேறு; நாயின் பசி வேறு' என்று எண்ணுவதில் உறுதியுடையவன் பாஸ்கரன். அவன் ஒன்றும் உத்தியோகக் காரனல்ல. ஒரு சாதாரண அச்சுக் கோப்பாளனாக வேலை செய்கின்றான். மாதச் சம்பளம் ஐநூறு வருவதாக வவுச்சரில் கையெழுத்துப் போடுவான். ஆனால் கையில் கிடைப்பதோ முந்நூறு ரூபாய்தான். ஏன் என்று யாராவது கேட்டால் அவர் வேலையை விட்டுப் போய்விட வேண்டியதுதான். அதுவே அந்தப் பகுதி அச்சகங்களில் பழக்கமாகவும் மரபாகவும் மாறிப்போயிருந்தது. ''அதிகத் தீமையைச் செய்துவிடுவார்களோ என்னும் பயத்தில், ஏற்கனவே ஒருவன் செய்த தீமையை மறக்கவும் மன்னிக்கவும் பழகி விட்டால், அப்புறம் சமூகத்தில் அதுவே சம்பிரதாயமாகிப் போய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும்' 'என்பதற்குச் சிறந்த உதாரணமாக அமையும்படி; அநியாயங்களை எதிர்ப்பதும், ஒழுக்குவதும் அநாகரீகம் என்று நினைக்கும் அளவுக்கு அடிமைத் தனத்தில் ஊறிப்போயிருந்தனர் பாஸ்கரனும் பாஸ்கரனைச் சார்ந்த தொழிலாளர்களும்.

அச்சகத் தொழிலை விட்டு வேறு எந்தத் தொழிலுக்கும் போக முடியாதவாறு அச்சகத் தொழிலில் உள்ள கலை வெறி பாஸ்கரனை ஆட்கொண்டிருந்தது. அவனது பரம்பரையே அச்சகத் தொழிலில் ஊறியதுதான்.

மனைவியின் பேறுகாலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அடுக்கடுக்காய் பிறந்த மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்துவிட்ட பாஸ்கரன் நான்காவதாகப் பிறக்கப் போகும் அந்த அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மனைவியின் பிரசவச் செலவுக்காக ஐந்து சதம்தானும் சேமித்து வைக்க முடியாத நிலையில்......! வீட்டு வாடகை, வீட்டுச்செலவுகள்........! ஓ! எத்தனை எத்தனை தேவைகள்! ஆசைகள்! இந்த முந்நூறு ரூபாய்க்குள் எண்ணிப் பார்க்கவே தலையைச் சுற்றுவது போல் இருந்தது பாஸ்கரனுக்கு. அதுவும் சம்பளப் பணம் முந்நூறு ரூபாவும் செலவழிந்து போன நிலையில் என்ன செய்வான் பாஸ்கரன்?

மாலையில் வேலை முடிந்து கை கழுவிக் கொண்டிருந்தான் பாஸ்கரன். இடது கைப்பெரு விரல் வலியினால் முறிந்து விடும் போலிருந்தது. கைவிரல்களிலோ அடுப்புக்கரியைவிடக் கருமை ஏறியிருந்தது. அச்சுக் கோர்க்கும் ''ஸ்டிக்''கில் அச்செழுத்துக்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி அடுக்கிக் கொண்டிருப்பதில் ஈயம் தேய்த்து...... தேய்த்து...... விரல் நகக்கண்கள் எரிந்து கொண்டிருந்தன. சிலவேளைகளில் அவன் எண்ணுவதுண்டு ''என்ர மகனெண்டாலும் இந்தப் பொறுக்கி வேலையைச் செய்யாமல் இருக்க வேண்டும்'' ஈயவிஷம் சிறுகச்சிறுக உடலில் ஏறினால் பின்னால் சொல்ல வேண்டியதில்லை.

இன்று எப்படியாவது முதலாளியிடம் கொஞ்சம் பணம் வாங்க வேண்டும். என்று எண்ணியே பாஸ்கரன் வேலைக்கு வந்திருந்தான். ஆனால் முதலாளி இரவில் நீ இங்க நின்று வேலை செய்யாட்டி காசு எப்படி வரும்? என்று கண்டிப்புடன் கேட்டு விட்டார். பாஸ்கரனுக்கு எப்படிப் பதில் சொல்வதென்றே தெரியவில்லை. நிறைமாதக் கர்ப்பிணியைத் தனியே விட்டு விட்டு இங்கு எப்படி அவன் வேலை செய்யமுடியும்? முதலாளி என்றாலே இரக்கமற்றவர்கள்தானா? — என்றாலும் இரவில் நின்று வேலை செய்யாமல் சமாளிக்க முடியாதென்பதைப் பாஸ்கரன் புரிந்து கொண்டான்.

''கடவுள் தம்மை நம்பியவரைக் கைவிடுவதில்லை'' — இந்த வார்த்தை அவனுக்கு நன்றாகவே நினைவு இருந்தது. அவன் தீர்மானித்து விட்டான் 'ஓவர் டைம்' செய்தாவது பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். இரவில் நின்று அச்சுக் கோர்த்தால் மேலதிகமாக மணித்தியாலம் இரண்டு ரூபாய் சம்பாதிக்கலாம் ஆனால் பத்து மணி வரையும் தான் அந்த வேலையையும் செய்ய முடியும் அதன் பின்பு அந்த வேலையை மற்றவனுக்கு ஒப்படைத்து விட வேண்டும். ஆனால் அச்சடிக்கும் பிளேட்டின் மிஷினில் வேலை செய்தால் விடிய விடிய வேலை செய்யலாம். — இப்படியாகத் தீர்மானித்துக் கொண்டான் பாஸ்கரன்.

* * *

அன்றும் அவன் அப்படித் தான் வழக்கம் போல் ஓவர் டைம் வேலை செய்து கொண்டிருந்தான். இரவு பத்துமணி வரை 'கொம்பஷிங்' வேலை செய்து விட்டு விடிய விடிய வேலை செய்யும் நோக்கத்துடன் பிளேட்டின் மிஷினை இயக்கிக் கொண்டிருந்தான் பாஸ்கரன். பிளேட்டினை இயக்கிக் கொண்டிருக்கும் இரும்புப்பிடி தரையைத்தொட்டாற் போல் ஒட்டிக்கொண்டிருந்தது. பாஸ்கரன் அப்பெடலில் ஒரு காலை வைத்து சைக்கில் பெடலை உழக்குவது போலப் பலம் கொண்ட மட்டும், மேலும் கீழும் அழுத்திக் கொண்டிருந்தான். பிளேட்டின் மிஷினின் வாய் முதலையின் வாயைப் போல் திறந்து மூடிக் கொண்டிருந்தது.

வாய் திறந்து கொள்ளும் போது இயந்திரத்தின் வாயில் பேப்பரைக் கொடுப்பான் பாஸ்கரன். அவன் கட்டை விரல்கள் பேப்பரின் மேற்பக்கத்தையும், மற்றைய விரல்கள் கீழ்ப்பகுதியையும் பற்றியிருக்கும் அசுரவேகத்தில் அவன் அந்தப் பேப்பரை இயந்திரத்தின் வாயிலில் உள்ள தட்டையான பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும் ஊசியில் இணைத்து விடுவான். சட்டென்று இயந்திரத்தின் வாய் மூடிக்கொள்ளும்.

> அழகு சாதனப் பொருட்களான கிறீம், லோஸன் போன்ற மேக்அப் பொருட்களை உகண்டா கடைகளில் காண முடியாது. அவை அங்கு தடை செய்யப்பட்டிருக்கின்றன. உகண்டா பெண்களின் இயற்கை அழகு கெட்டுவிடக்கூடாது என்பதற்காகவே இத் தடை!

கிழட்டுப் பிளேட்டின் மிஷின் 'கடாக், கடாக்' என்ற ஒலியுடன் ஒருதடவை தன் உடலை உதறிக் கொள்ளும். அப்போது தான் காகிதத்தில் அச்சுப் பதியும். உடனே இயந்திரத்தின் வாய் திறந்து கொள்ளும். திறந்தவாயில் பாஸ்கரன் கையை விட்டு முதலில் வைத்த பேப்பரை எடுத்து விட்டு அதே வேகத்தில் மற்றப் பேப்பரைக் கொடுப்பான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேட்டின் மிஷினில் வேலை செய்யும் போது கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு நிற்க வேண்டுமென்பார் முதலாளி. ஆனால் பாஸ்கரனின் எண்ணமெல்லாம் வீட்டில் தனியாக இருக்கும் சரசுவையே சுற்றி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்.

இரண்டு தினங்களை எப்படியோ சமாளித்துக் கொண்டு விட்டான் பாஸ்கரன் வீட்டின் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வந்தது. வீட்டுக்காரி பாலாக்கா "வாடகைக்காசு ஒழுங்காகத் தராவிட்டால் வீட்டை விட்டுப் போய்விட வேண்டும்" என்று நாட்கெடு வைத்துவிட்டாள். இத்தனைக்கும் அவள், "இரண்டு அங்கிகள் வைத்திருப்பவர் மற்றவனுக்கு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும்" என்று போதித்த புனிதர் யேசுவின் மதத்தைப் பின்பற்றும் ஒருவரைத்தான் திருமணம் புரிந்து கொண்டிருக்கிறாள். — அதுவும் அவனிடமிருந்த பணத்திற்காகத்தான்.

பாஸ்கரனுக்கு ரூபாய் இருபத்தைந்துக்கு மேல் புரட்ட முடியவில்லை. இதைக் கொண்டு அவனால் என்ன செய்ய முடியும்? அதுவும் இந்த விலை வாசியின் முன்னால்!

அவனின் கையில் பணத்தைக் கண்டதும் பாலாக்கா அதனைப் பற்றிக் கொண்டு — "பாஸ்கரன் மிச்சக்காசு தராவிட்டாலும் பரவாயில்லை நீங்கள் இந்த வீட்டை விட்டுப் போனால் போதும்! இதுவே எனக்குக் காணும்" — கூறிவிட்டுப் போய்விட்டாள். பாஸ்கரனினால் அந்தச் சொற்களை ஜீரணிக்க முடியவில்லை.

இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கை நெறியை மறந்து, 'மனிதாபிமானம்', 'அன்பு', என்பனவற்றின் அரிச்சுவடியே அறியாது சில்லறை சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் மனிதர்கள் உள்ள இவ்வுலகில் திக்கற்றவனால் என்ன செய்ய இயலும்? அவன் கடவுளிடம் வேண்டிக் கொண்டான்;

"கடவுளே; உள்ளத்தை ஊடுருவித் தைக்கக்கூடிய இதயம் ஒன்றிய ஈடுபாடு ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையே இனியாவது படைக்கப்படட்டும்"

* * *

விதி வழி வந்த சரசும் பாஸ்கரனும் வீதியில் நடந்து கொண்டிருந்தனர். சரஸ், பாஸ்கரனைத் திரும்பிப் பார்க்கிறாள். கண்களில் தீட்சண்யத்துடன் நடந்து கொண்டிருக்கிறான் அவன். இன்று குழந்தை பிறந்து விடும் என்பது அவர்களுக்குப் புரியும். ஆனால் பாஸ்கரன் என்ன செய்யப் போகிறான் என்ற ஏக்கமே சரசின் கண்களைக் கலங்கச் செய்தன!

சரஸ் விரைவாக நடக்கத்தான் முயன்றாள். ஆனால் அதற்குள்......! "ஆ... ! ஐயோ !" என்றவாறே தரையில் கையை ஊன்றியவாறே உட்கார்ந்து விட்டாள் அவள்.

வேதனையின் விளைநிலம் பெண்மைதானோ! ஒரு உயிரை உருவாக்குவதில் ஒரு பெண்ணுக்குத்தான் எத்தனை சோதனைகள்! கடமைகள்!

பாஸ்கரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கீழே விழுந்துவிட்ட மனைவியைத் தூக்குவதா? அல்லது அயலில் இருக்கும் யாரையாவது கூப்பிடுவதா? ஒன்றுமே செய்யத் தோன்றாமல் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றிருந்தான் பாஸ்கரன்.

இப்பிடித்தான் அன்று யோசேப்பும் மரியாளும் நின்றிருப்பார்களோ? பிறக்கப் போவது ஆண்டவன் குழந்தை என்பது அவர்களுக்குப் புரிந்தே இருந்தது. ஆனால் இங்கு பிறக்கப் போவது? துன்பங்கள் மனிதனுக்கு மட்டுமே உரித்தானவை அல்லவா?

பாஸ்கரனின் நெற்றி சிந்தனையால் விரிகின்றது. தன் இரு கைகளிலும் சரசுவை வாரிச் சுமந்த வண்ணம் வீதியில் நடந்து கொண்டிருக்கிறான்.

நாளை இந்தப் பிரபஞ்சத்தின் ஒலிமஞ்சரியாய் தனது மழலை என்னும் யுகராகத்தை அர்ச்சிக்க காத்திருந்தன அந்தப் பிரபஞ்சப் பூக்கள்.

[கற்பனையே]

## தகவம் அளிக்கும் பரிசு

தமிழ்க் கதைஞர் வட்டம் [தகவம்], இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளிலே, 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்து, திருமதி ரதிதேவி கந்தசாமி (தாமரைச்செல்வி) புனைந்த "ஓர் உயிரின் விலை" (சிந்தாமணி 11-10-82) என்னும் சிறுகதையைச் சிறந்தது எனத் தேர்ந்தெடுத்துள்ளது.

'தகவம் மதிப்பீட்டில் அடுத்த ஈரிடங்களையும் பெறும் சிறுகதைகளின் விபரங்கள் :

2. "பார்வைகளும் பரிதாபங்களும்" வேலாயுதம் விஜயகுமார் (சிந்தாமணி 13-12-81

3. "ஆண்டாண்டு தோறும்" எஸ். ஜெகநாதன் (மல்லிகை நவம்பர் 81)

ஜப்பானில் ஹனி மூன் தம்பதிகளுக்காக ஃபெலிஸிடேசன் கைட் எகஸ்பிரஸ் என்று தனி ரயில் விடுகிறார்கள் அந்த ரெயிலில் இரவு 8 மணிக்கு லைட்டை அணைத்து விடுகிறார்கள். படுக்கை சீற்றுக்கள் தனி அறையில் இருக்குமாம்.

## இப்படியும் சோதிடம்!

"நவம்பர் 21க்கும் டிசம்பர் 20க்கும் இடையில் பிறந்த பெண் தேவை இப்படியான விளம்பரங்கள் மணமகள் தேவை பகுதியில் பிரிட்டன் பத்திரிகைகளில் பிரசுரமாகும். இந்த எண் கணக்கு ஏன்? குறிப்பிட்ட தேதிக்குள் பிறப்பவர்கள் மிகச் சிறந்த குடும்பப் பெண்களாக இருப்பார்கள் என்பது இங்கிலாந்து சோதிடம்.

ஆதாரம்; வுமன்ஸ் ஒன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நூற்றாண்டின்

# இரு தமிழ் நாவல்கள்

எஸ். அகஸ்தியர்

ஆசிரியரின் நாவலில் விசேஷமாகக் குறிப்பிடக் கூடிய இன்னோர் முக்கிய சிறப்பம்சம், அவர் நாவலில் கையாண்ட உப தலைப்புகளாகும். இவை இந்நாவலைப் படிக்க முன்பே நாவலின் கதையுள்ளடக்கம் இன்னதென விளக்குவதாகும். வரிசைக் கிரமமாக இதனுள்ளடங்கிய அத்தியாயங்களையும் உப தலைப்புகளையும் பார்த்தால், நறுமணங்களும் வர்ண மலர்களை நூலிழையில் கோர்த்து விட்ட ஒரு பூமாலை போல் நாவல் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற தலைப்போடு நாவல் ஆரம்பித்து, ஒவ்வோர் அத்தியாயங்களிலும் கதை பாகத்தை உள்ளடக்கித் தீட்டிய தலையங்கங்கள் கீழ்க்கண்டவாறு நீள்கின்றன:

'பிரதாப முதலியார் பிறப்பும் வளர்ப்பும், விருத்தியாப்பியாசமும், கதாப்பிரசங்கமும்'

'சம்பந்த முதலியார் சரித்திரம்'

'ஞானம்பாளுடைய குணாதிசயங்களும் கல்வித் திறமையும்'

'பிரதாபமுதலியின் தாயார் கன்னிப் பருவமாயிருந்தபோது நடந்த வர்த்தமானம் —நல்ல மருமகள்'

மேற்குறிப்பிட்ட நான்கு அத்தியாயங்களின் நான்கு தலையங்கங்கள் இவ்வாறு நீண்ட தலைப்புகள் கொண்டு விரவிப்போகும் தலையங்கங்கள் ஈற்றில், 'ஊருக்குத்திரும்புதல். துக்கப்படுகிறவர்கள் முடிவில் சுகம் அடைவார்கள்' என்ற தலைப்போடு முடிவடைகின்றன.

இவ்வாறு 46 அத்தியாயங்களுடன் 370 பக்கங்களை அடைத்துக் கொண்டு 'பிரதாப முதலியார் சரித்திரம் முற்றிற்று' என்ற மங்களக் குறிப்போடு நாவல் முடிகிறது.

இவ்வகையில் புனையப்பட்ட இந்நாவலின் இறுதிப் பகுதியில் 'தமிழ்ப்பாஷை' பற்றி வித்துவான் வேதநாயகம்பிள்ளை அவர்கள் கூறிய கருத்துக்கள் 'களை' கட்டி நிற்கின்றன. இதன்மூலம், ஆசிரியர் தன்னை ஒரு 'தமிழ்ப் பாஷாபிமானி' என்பதைக் காட்டிக் கொள்வதுடன், நம்மையும் அப்படி ஆக்கிவிடுகின்றார். நாமும் அவர் கருத்தை அட்டியின்றி ஏற்கவே செய்கின்றோம்.

சிறந்த ஆங்கிலப் புலமையுடைவரான வித்வான் வேதநாயகம்பிள்ளையவர்கள், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ், 'மாயூரம் டிஸ்ட்ரிக்ட்முன்சீப்' பாகப் பெரும் அந்தஸ்துள்ள பதவி வகித்துவந்தபோதும், அவர் இதயம் இப்படித் தமிழில் தோய்ந்திருப்பது பெரும் வியப்புக்குரியது; போற்றக்கூடியது.

பிரதாபமுதலி கூற்றாக ஆசிரியர் வேதநாயகம்பிள்ளை இவ்வாறு கூறுகின்றார்.

'எண்ணிறந்த தேவாலயங்களும், பிரமாலயங்களும், அன்னசத்திரங்களும், நீர்வளமும்—நிலவளமும், நாகரிகமும், ஆசார நியமங்களும் நிறைந்த இந்தத் தமிழ்நாடு, மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும், அப்படியே தமிழ்ப் பாஷையும் சர்வோதகிருஷ்டமான பாஷையென்றுஞ் சகலரும் அங்கீகரிக்கிறார்கள். அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று, சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுதும் ஏக சக்ராதிபத்தியஞ் செலுத்திவந்த தமிழ் அரசியை இப்போது இழக்கலாமா?'

இவ்வாறு தமிழின் பண்பும் பயனும் தொன்மையுங்கூறி ஆசிரியர் வேதநாயகம் பிள்ளையவர்கள் வாசகர்களை விழித்துக் கேட்கும் போது, 'முடியாது; இழக்கவே முடியாது; நந்தமிழரசியை இழக்கவே மாட்டோம்' என்றே நாமும் நம்மையறியாமற் கூறத் துடிக்கின்றோம்.

இத்துடன் ஆசிரியர் நிற்கவில்லை. மேலும் ஒருபடி சென்று தமிழின் தாற்பரியங்களை அழகுற எடுப்பாக விமர்சித்து, பிரதாபமுதலி வாயிலாக இவ்வாறு விரிவக்கின்றார்:

'நம்மைப் பெற்றதுந் தமிழ், வளர்த்ததுந் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ், நம்முடைய மழலைச் சொல்லால் நமது தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததுந் தமிழ், நாம் குழந்தைப் பருவத்தில் பேச ஆரம்பித்தபோது முந்தி உச்சரித்ததுந் தமிழ். நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டியதுந் தமிழ். தாய், தந்தை, குரு முதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததுந் தமிழ். ஆதிகாலம் முதல் நம்முடைய முன்னோர்கள் எல்லோரும் பேசின பாஷையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதின பாஷையுந் தமிழ். இப்போது நம்முடைய மாதா பிதாக்களும் பந்து ஜனங்களும் இஷ்டமித்திரர்களும் இதரர்களும் பேசுகிற பாஷையுந் தமிழ். நம்முடைய வீட்டுப்பாஷையுந் தமிழ். நாட்டுப்பாஷையுந் தமிழ். இப்படிப்பட்ட அருமையான பாஷையை விட்டு விட்டுச் சமஸ்கிருதம், லத்தீன் (ஆங்கிலத்தை ஆசிரியர் குறிப்பிடவில்லை. எஸ். ஏ.) முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்கின்றவர்கள், சுற்றத்தார்களை விட்டுவிட்டு, அந்நியரிடத்தில் நேசஞ்செய்கிறவர்களுக்குச் சமானமாயிருக்கிறார்கள்.

ஆசிரியர் வேதநாயகம்பிள்ளையின் இந்த வாக்கு உண்மையில் சுருதி சுத்தமாகவே விழுந்திருக்கிறது. இது, இந்தியத் தமிழர்களாகவுள்ள ஆங்கில நாகரிக போதிகளுக்கு மாத்திரமல்ல ஆங்கிலக் கலாசார மோகத்தினால் ஈர்க்கப்பட்டுத் தமது ஆற்றுமாவையே கொன்று போலிகளாக வாழும் மேல்தட்டு வர்க்கத்தவர்களான — நமது ஈழத் தமிழர்களான 'டமிழர்' களுக்குச் சரியான சவுக்கடி என்றாலும், தமிழ் புண்ணியஞ் செய்தது. ஆறுமுகநாவலர் அதன் பாதுகாவலனாகத் தோன்றாவிடின், தமிழ்க்குழந்தைகள் யாவும் இன்னும் 'டடி — மம்மி' யில்தான் நடிக்கும். வேதநாயகம்பிள்ளை போன்றவர்கள் நமது ஆறுமுக நாவலர் போன்று தமிழ் மொழிக்கும் பாதுகாவலனாக — பங்காளியாக விளங்கினார் என்பதற்கு இந்நாவல் சான்று பகரும் சுவடு எனலாம்.

தனது உற்றம் சுற்றம் சூழலை மறந்து அந்நியர்களிடத்தில் காட்டும் பாசம் வெறும் போலியானது என்பதனை உணர்த்தும் ஆசிரியர், இதனால் வரும் பாதகமான விளைவுகளையும் நான்கு பக்கங்களுக்குமேல் விரித்துக் கொண்டே போகின்றார். நாமும் அவர் கூற்றை ஏற்று அதனுடன் இணக்கம் காணவே செய்கின்றோம்.

நாவலை வாசித்து முடிக்கும்போது எம் கண் முன் ஆசிரியர் வேதநாயகம்பிள்ளை அவர்கள் ''மாயூரம் டிஸ்ட்ரிக்ட் முன் சீப்'' பாகத் தோன்றவில்லை. ஏதோ ஓர் இலட்சிய தாகத்தில் இளைந்த சத்தியவந்தர் போலவும், தமிழ் மணங் கமழும் பூபதியாகவுமே தோன்றுகின்றார்.

பல்வேறு கோணங்களில் வைத்துப் புரட்டிப் பார்க்கின், வேதநாயகம்பிள்ளையின் ஓர் தமிழ்க்காவியத்தின் சித்திரமாகவே நமது நெஞ்சில் நிழலாடச் செய்கின்றது. இந்நாவலை இதற்கு மேலும் தனியாக ஆய்வும் விமர்சனமும் செய்யவேண்டும் என்பது என் அபிப்பிராயம். அந்த அளவிற்கு இந்நாவல் இலக்கிய உலகில் ஓர் நாயகனாகவே திகழ்கின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்ட இந்நாவல், இன்றும் ஓயாத இசையாக, அழியாத சித்திரமாக வாசகர் இதயங்களிலும் மனங்களிலும் நிழலாடுகிறதென்றால், அதுவும் ஒரு பெரும் சாதனைதான்.

இவ்வகையிலும் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளையவர்களின் ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்ற நாவல், தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் அழியா வினை நிலமாக என்றும் உயிர் பெற்றுத் துலங்கிக்கொண்டிருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

திரு. வேதநாயகம்பிள்ளையும், அவர் தமிழிற் தோற்றுவித்த இந்நாவலும் தமிழிலக்கியப் பரப்பில் என்றும் சங்கமித்துப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும் என்பதற்கும் ஐயமில்லை.

தமிழகத்தில் நாவல் இலக்கியத்தைத் தோற்றுவித்த வித்வான் வேதநாயகம் பிள்ளையை அடுத்து, ஈழத்துத் தமிழ் இலக்கியப்பரப்பில் தமிழ் நாவல் இலக்கியத்தின் தொடக்க வரலாற்றை நோக்கின், அதன் முதல்வராகத் திகழ்பவர் ஈழத்துத் தமிழறிஞரான ஜனாப் சித்திலெப்பை அவர்களாகும். அறிஞர் சித்திலெப்பையவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன் தொடக்கிவைத்த தமிழ் நாவல் இலக்கியத்துறை இன்று ஆல்விருக்ஷம்போல் பரவி நிற்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில் சுமார் எழுநூறு நாவல்கள் ஈழத்தில் வெளிவந்துள்ளன.

இவற்றில் 'நாவல்' என்ற இலக்கிய அம்சத்தைப் பெற்றவை எவையென்று விசாரித்தால் விரித்தெழுதுவதாயின் சுதந்திரமாக ஒரு நாவலை எழுதியாகவேண்டும். ஈழத்தில் அன்று குறுகலாகவும் இன்று பரவலாகவும் சமூகத்தில் பரவாதவர்கள் — சமூகக் கண்ணோட்டமின்மையால் ஆளுமைபெற முடியாதவர்கள் — பேனா தூக்கியதன் விளைவு, சமூகத்தை விமர்சித்து எழுதுவதற்குப் பதில், சமூகத்தில் விரக்திகொண்டு சமூகக்கண்ணோட்டத்துடன் சிருஷ்டிக்கும் எழுத்தாளர்களைச் 'சாடுவதும்' அப்படிச் சாடுவதற்காகவே எழுதுவதும்தான். ஆனால், ஆசிரியர் சித்திலெப்பை தான்பார்த்த சமூகத்தை நெஞ்சார யோசித்துத் தானறிந்தவரை இதய சுத்தியாக இலக்கியம் சிருஷ்டித்த எழுத்தாளர் என்பதை அவரின் 'அசன்பேசரித்திரம்' என்ற நாவல் சான்று கூறும்.

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய வரிசையில் ஜனாப் சித்திலெப்பை அவர்களின் 'அசன்பே சரித்திரம்' நாவல் ஓர் கலங்கரை விளக்கம் என்று கூறுதல் மிகையல்ல.

இந்நாவலை ஆசிரியர் ஜனாப் சித்திலெப்பை அவர்கள் எழுதிய காலச் சூழலோடு இணைந்து வாசிப்பின் இவ்வுண்மை புலப்படும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதன் இங்கே



—சம்மாந்துறை எம்.எம். நௌஷாத்—

வயல் வேலைகளை முடித்துக் கொண்டு ஆற்றடியில் முகத்தையும் கை, கால்களையும் கழுவிக் கொண்டு தேநீர்க்கடையில் ஏதாவது சாப்பிட்டு விட்டு வீடு செல்லலாம் என்று எண்ணிக் கொண்டே, வாயில் ஏதோ பாடலொன்றை முணுமுணுத்தவாறு வரம்புகளினூடாக வந்து கொண்டிருந்த நஸீர் அந்த அபாயக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு நின்றான்.

கிள்ளும் பசியையும் மறந்து விட்டு, தன் ஊத்தைச் சாரத்தால் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே ஒலி வந்த திசையை நோக்கி செவியைக் கூர்மையாக்கிக் கொண்டான் நஸீர்.

மீண்டும் அந்த அபாயக் குரல் எழுந்ததும், அது தன் போடியார் அபுல்காஸிமின் மனைவியின் குரலென்பதை ஊகித்துக் கொண்டான். அதை அறிந்ததுமே அவனுடலில் ஏதோ ஓர் உணர்வு உந்தி உறுமிற்று. என்ன ஆபத்து நடந்து விட்டதோ எனும் ஆவல் உள்ளத்திலே தேங்க அபுல்காஸிம் போடியாரின் வீட்டுத்திக்கை நோக்கி ஓடத்தொடங்கினான்.

அபுல் காஸிம் போடியாரின் வீட்டில் இடங்கொள்ளா சனக்கூட்டம் குழுமி இருந்தது. என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலும் ஆர்வமும் யாவரினதும் வதனங்களிலே பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ஊரிலே குழப்பமென்றால் வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம் இருப்பதுபோல், தெருவிலே கூத்து என்றால் கூத்துப் பார்க்கவும் ஒரு கூட்டம் இருக்கின்றதல்லவா?

"என்ன நடந்தது?" நஸீரின் மனத்தில் எழுந்த வினாவுக்கு விடையளிக்க எவருமே தயாராயிருக்கவில்லை. அவனுக்கு மனம் துறுதுறுத்தது. இது என்ன வேடிக்கை ஒன்றுமே புரியவில்லையே கேட்டாலும் சொல்கிறார்களில்லையே என்று மனதுக்குள் அலுத்துக் கொண்டே உள்ளே நோக்கி ஓடினான்.

அபுல்காஸிம் போடியாரின் மனைவி கிணற்றைச்சுற்றி நின்றவாறே ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். அழுகையையே அனுபவித்திராத அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வருவதே கஷ்டமாயிருந்தது.

நஸீருக்கு ஓரளவு விஷயம் புரிந்தது. யாரோ கிணற்றுக்குள் விழுந்து விட்டார்கள்.

சிலர் அவள் அலறும் காட்சியை ரசித்துக் கொண்டிருப்பதையும், சிலர் வாய் அசையும் வேடிக்கையை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருப்பதையும் நஸீரின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

சிலர் விழுந்தவனை எப்படிக் காப்பாற்றுவது என்று தங்களுக்கு தெரிந்த யோசனைகளையெல்லாம் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதற்குள்ளும் சிலர் தங்களின் வீரப்பிரதாபங்களைப் பற்றி கதை அளந்து கொண்டிருந்தார்கள்.

வேறு ஒரு கூட்டம் குழந்தை எப்படி விழுந்தது என்பதை அபுல்காஸிம் போடியாரின் மனைவியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளுக்கு மூக்கும் முழியும் வைத்து கதை ஜோடித்துக் கொண்டிருந்தது.

எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர ஒருவராவது கிணற்றுக்குள் பாய்ந்து குழந்தையைக் காப்பாற்ற முன் வரவில்லை.

நஸீருக்கு நெஞ்சிலே தனையும் வெறுப்பும் பொங்கியது. தான் இளவயதுடையவன் என்பதை மறந்தே விட்டான். மனிதாபிமான உணர்வு அவனை உன்ன யாரும் எதிர்பாராதவாறு கிணற்றுக்குள் பாய்ந்தான் நஸீர்.

அ…அ.. ஆ……

அவனது கால் கிணற்றினுள் இறங்குவதற்காக கிணற்றுச் சுவர்களிலே பதிக்கப்பட்டிருந்த இரும்புத் தடுப்புக்களிலே மோதியது. வேதனை மிக வேகமாக மூளைக்கு அடித்தது. எனினும் பல்லைக் கடித்துக் கொண்டே குழந்தையை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியுணர்ச்சி உந்தித் தள்ள கிணற்றுக்குள் சுழியோடினான் நஸீர்.

நீர் காயத்திலே பட வேதனையும் வலியும் இன்னும் கூடிற்று முகம் சலிப்பைக் காட்டியது. ஊசிகளால் குத்தி இழுப்பது போல ணங் ணங் என்று தெறித்தது. குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டே சிரமப்பட்டு ஏறினான்.

அபுல்காஸிம் போடியாரின் மனைவி குழந்தையைப் பறித்துக் கொண்டு ஓடினாள்.

நஸீருக்கு வலி உடலை வருத்தியது. தன்னை யாரும் சைக்கிளில் வீட்டுக்கு எடுத்துச் செல்லமாட்டார்களா என்ற ஆதங்கத்துடன் தலையை நிமிர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தான். அவனைக் கவனிப்பதற்கு ஈ காக்கை கூட அங்கிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்கும் சங்கம்

சென்னையில் ஒரு ''நகைச்சுவைச் சங்கம்'' அண்மையில் தொடங்கப்பட்டது. அனைத்திந்திய சங்கத்தின் கிளை இது. நீதிபதி மோகன் இந்தச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். மக்களிடையே நகைச்சுவை உணர்வை ஊக்குவிப்பது இச்சங்கத்தின் நோக்கமாம். நகைச்சுவைப்புத்தகங்களையும் நகைச்சுவைப் பத்திரிகைகளையும் வெளியிடுவது இவர்கள் திட்டம். ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை இவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சந்தித்து நகைச்சுவைத் துணுக்குகள், நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். வாய்விட்டு, மனம்விட்டுச் சிரிக்கிறார்கள்.

தகவல்: **க. ரவிச்சந்திரன்,**
மட்டக்குளி.

சரி எப்படியோ ஓர் உயிரைக் காப்பாற்றிவிட்டோமே என்று மனதிற்குள் திருப்திப் பட்டுக் கொண்டு பசியும் சோர்வும் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே அழுத்த வீட்டை நோக்கி நொண்டி நொண்டி நடக்கத் தொடங்கினான் நஸீர்.

அந்த அமாவாசை இருட்டில் கதீஜாவின் குடிசையிலிருந்து அந்த முனகல் ஒலி எழுந்து கொண்டிருந்தது. நஸீரின் ஈனஸ்வரமான வேதனைப் புலம்பல் தான்.

மூலையிலே ஒரு குப்பி விளக்கு சிணுக் சிணுக் என்று எரிந்து கொண்டிருக்கிறது. வெளியே தெருநாய்கள் ஊளையிட்டவாறே தர்மயுத்தம் செய்து கொண்டிருக்கின்றன.

ஒரு கிழிந்த பாயிலே உடல் வேதனையாலே முக்கி முனகியபடி படுத்துக் கொண்டிருந்தான் நஸீர். வாய் எதையெதை எல்லாமோ சொல்லி புலம்பிக் கொண்டிருந்தது. கதீஜா துயரத்துடன் கண்களைக் கசக்கியவாறே பாயொன்றிலே அருகே அமர்ந்து விட்டாள்.

கதீஜா துயரத்துடன் குடிசை நீக்கலுக்குள்ளால் வானத்தைப் பார்த்து எதனையோ புரிந்து கொள்ள முயற்சி செய்தாள். ஆனால் எதனையும் அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை. சோர்வுடன் தலையை தாழ்த்தினாள்.

வாழைக்குருத்துபோல இளமைச் செழிப்போடு இருந்த தன் மகன் இப்படி வாடி வதங்கிப் போயிருப்பதை அவளால் சகிக்கவே முடியவில்லை. இந்த வேதனை தாளா நாடகத்தைக் காண வைத்த இறைவனை நொந்து கொள்வதைத்தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

கதீஜா குசினிக்குப்போய் வெறும்பானையைத் துழாவிப் பார்த்தாள் சோறு இருக்கலாம் என்ற நப்பாசையில். தாங்கமுடியாத பசி அவளை அப்படிச் செய்ய வைத்தது. பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும். வீட்டின் தூண்தானே இப்படிச் சரிந்து போயிருக்கிறது.

நஸீர் அன்று காயம்பட்ட போது ஏதோ பச்சிலையொன்றை வைத்துக் கட்டிவிட்டான். இரண்டாம் நாள் கால் சிறிது வீங்கியது. அவன் அதனைப் பொருட்படுத்தவில்லை ஏதோ சாதாரண வீக்கம் தான் என்று எண்ணிக் கொண்டான். மூன்றாம் நாள் தான் யாரோ ஏற்பு வலி என்று சொன்னார்கள்.

சட்டென்று போய் வைத்தியம் பார்ப்பதற்குக் கூட ஆஸ்பத்திரி அருகில் இல்லை ஏழெட்டு மைல் போகவேண்டும். அதனையெல்லாம் யோசித்துத்தான் கதீஜா இளையவன் கபூரை போடியாரிடம் அனுப்பி வைத்திருந்தாள். இந்தச் சின்னக் கிராமத்தில் அவரிடம் மட்டும்தான் கார் இருக்கின்றது.

நல்ல நம்பிக்கை இந்த நேரத்தில் வேறு யார் உதவப் போகின்றார்கள்?

''உம்மா உம்மா'' என்று முனகிக் கொண்டிருந்தான் நஸீர். கதீஜா அவனுடைய தலையை அன்புடனும் ஆதரவுடனும் தடவிக் கொண்டிருந்தாள்.

''இறைவா என் மகனைக் காப்பாத்து'' என்று மனதிற்குள் மானசீகமாக வேண்டிக் கொண்டாள். ஊதிய பலூன் போல பருத்துப் போயிருந்த முகத்தையும் காய்ந்து வரண்டு போயிருந்த உதடுகளையும் பார்த்த போது அவள் இதயம் விம்மிற்று.

கதீஜா குப்பி விளக்கைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியே போனாள்.

கபூர் வருகிறானா என்று இருளைத்துருவி துருவிப் பார்த்தாள். காரின் அரவம் கூட கேட்கவில்லை. தன்கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை புடைவைத்தலைப்பால் துடைத்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

நஸீரின் முகம் வரவர வீங்கிக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது. அவனது உடல் பலவீனமடைந்து கொண்டு வருவதையும் உணரத்தான் செய்தாள். ஆனால் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு ஊமைக்கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

''மனே நீ பேயன் மாதிரி போடியார்ட புள்ளய காப்பாத்தப் போனத்தாலதானே இந்தக் கக்கிசமெல்லாம் வந்தது.''—பொறுத்துக் கொண்டவளுக்கு தொடர்ந்து பொறுத்துக்கொண்டிருக்கமுடியவில்லே. உள்ளத்திலிருப்பதை அப்படியே கொட்டி விட்டாள்.

''இல்லம்மா போடியார் எப்பிடியா இருந்தாலும் அதுவும் ஒரு புள்ளதானே. வீணுக ஏன் ஒரு உயிர் சாகணும்''

அவன் மனிதத்துடிப்புடன் கேட்டபோது அவள் சிலிர்த்துப் போனுள்.

* * *

கபூர் மெல்லக் கதைத்துப் பார்த்தான்; பலமாகக் சொல்லிப் பார்த்தான்; இறுக்கமாகவும், உருக்கமாகவும் கெஞ்சினுன்; மன்ருடினுன். அவனுடைய கதையைக்கேட்டு இரும்பு கூட இளகிப் போயிருக்கும். ஆனுல் அபுல் காஸிம் போடியார் மசிந்து கொடுக்கவேயில்லே.

''போடியார் நான் சொல்றது பொய்யெண்டா நீங்களே வந்து பாருங்க. நீங்க செய்யிறது பெரிய ஒதவி போடியார். ஒரு அர மணித்தியாலத்துக்கு கார ஒலுப்பம் அனுப்புங்க''

அழாக்குறையாக மன்ருடினுன் கபூர்.

''கபூர் ஒனக்கு எத்தின தரம் சொல்லிட்டன். எண்ட மகளும் மருமகனும் இண்டக்கி செகன் ஷோ படம்பாக்கப் போக ரெடியாகிக் கிட்டிருக்காங்க. அவங்கட ஆசயக் கெடுக்கேலுமா. காரில்ல ஓடுடா''

''போடியார் நீங்களா இப்பிடிக் கதைகிறீங்க. தயவுசெஞ்சி இண்டக்கி மட்டும் ஒதவுங்க. ஒங்களுக்கு நான் மாடா ஒழைக்கிறன் போடியார்''

கபூர் இரங்கும் வார்த்தைகளால் கெஞ்சுவதை போடியார் கவனிக்காதவர் போல காருக்கு பெற்ருேல் ஊற்றிக் கொண்டிருந்தார்.

''கபூர் இவடத்த கத்திக் கொண்டிருக்காமப் போயிரு''

''போடியார் அவங்கள நாளக்கி படம்பாக்கப் போகச் சொல்லுங்க. இண்டக்கி ஒலுப்பம் கார அனுப்புங்க போடியார்''

''கபூர் சொல்லிப் போட்டன் இனிக் கதைக்க மாட்டன் தும்புக் கட்டாலதான் வெரசுவன்''

போடியார் ஆக்ரோஷமாகச் சொன்னதையும் கபூர் பொருட்படுத்தவேயில்லே.

''போடியார் என்ன அப்படிச் செஞ்சாலும் பரவாயில்ல. எண்ட காக்காவ காப்பாத்த ஒதவுங்க போடியார்''

''கொள்ளயாக்கதைக்காம போ கபூர். இப்ப வரவர வாய் மிஞ்சிப் போயிட்டு நேரமும் ஒம்பது மணியாயிட்டு ரேடியோவில செய்தி சொல்லுது. ஒன்பதரமணிக்கு ஷெகன்ஷோ தொடங்குது''

கபூருக்கு ஆத்திரம் பிறிட்டது. நாளங்கள் புடைத்தன, உணர்வுகள் கொந்தளித்தன.

''ஒரு உசிரையும் விட படம் பெரிசா பொயிட்டா போடியார்''

''ஒண்டா படம்தான் பெரிசி. ஒங்கலப்போல பிச்சக்கார நாய்கள்ர உசிரையும்விட அந்தப்படம்தான் பெரிசி''

''போடியார் எண்டகாக்கா மௌத்தாப்போனு ஒங்கட மேலதான் அந்தப்பழி எல்லாம் வந்துசேரும்...'' — கபூர் ஆத்திரம் கொப்பளிக்க சொல்லி முடிக்கவில்லே. போடியார் சட்டென்றுபதிலளித்தார்.

''அவன் மௌத்தானு இன்னுெண்டப் பெத்துப்போடுறது அதுதானே ஒங்கட வழக்கம்''

அதைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோரும் சிரித்தார்கள். கபூருக்கு நெஞ்சினுள்ளே எரிமலே தகதகத்தது.

''போடியார் ஒங்கட புள்ளய எண்ட காக்கா காப்பாத்தினத இதுக்குள்ள மறந்து போயிட்டீங்களா?''

## பேசும் இயந்திரம்!

மட்சு சிதாரேக்கி என்னும் ஜப்பானியக் கம்பெனி பேசும் விற்பனே இயந்திரமொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த இயந்திரம் ஒரு பெண்ணின் குரலில், இருக்கும் பொருட்களேயும், கூறி அதன் விலேகளேயும் குறிப்பிட்டுச் சொல்லும்.

குறிப்பிட்ட பொருட்களுக்குரிய காசைப் போடாமல் குறைவாகப் போட்டால் மிச்சக் காசையும் போடும் படியாகக் கூறும்—மிகுதிக்காசையும் எடுத்துப் போகும்படி அச்சுறுத்தும் இந்த இயந்திரம்.

அதுமட்டுமல்ல, இந்தயந்திரம் பொருள் வாங்கியவருக்கு நன்றியும் கூறுமாம்.

— கதிர் மாணிக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபூர் பொறுக்க முடியாமல் சொல்ல, போடியார் சில கணங்கள் ஆழ்ந்து சிந்தித்து விட்டு வீட்டுக்குள் போனார்.

கபூர் தன் வார்த்தைகளுக்கு தகுந்த பலன் கிடைத்து விட்டதைக் கண்டு மனதிற்குள் புளகாங்கித மடைந்தவனாக அவர் வரும் வரை விழி பூக்க காத்திருந்தான்.

* * *

கதீஜா குப்பிவிளக்கை ஏந்திக் கொண்டு வெளியே வந்தாள். கண்கள் பூக்கும்வரை பார்த்தும் கபூரைக் காணவேயில்லை. பெருமூச்சொன்றை நெட்டுயிர்த்தவளாக உள்ளே வந்தாள்.

போகிறபோக்கும் அவன் பேசும் சமயத்துக் கொவ்வாத வார்த்தைகளும் அவள் உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தன. அவளது உள்ளம் கட்ட முடியாத கற்பனைக் கோட்டைகளையெல்லாம் கட்டி முடிந்தது. எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணிஎண்ணி குழைந்தது. வாழ்வெலாம் ஒளி காட்டிக் கொண்டிருக்கும் தீபம்.... பாசத்தைக் கொட்டி வளர்த்த மலர்.......... அன்பு கொண்டாடிய உள்ளம் அணைவதையாரால்தான் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள முடியும்?

இறைவனே இரங்காயா? என்மகன் மீது கருணை கொள்ளாயா என்றெல்லாம் எண்ணித் தவித்துக் குழம்பினாள் கதீஜா. அவள் நஸீரின் உடலை நெஞ்சம் வெதும்பப் பார்த்தாள். வெம்பிப் போயிருந்த வதனத்தையும் சூம்பிப் போயிருந்த கரங்களையும் பார்த்தவுடன் அவளுள்ளம் துயரம் தாளாது அழுதது.

''ஏண்டா நீ இப்பிடி மெலிந்து போனாய்?''—மனதுக்குள்ளே அந்த வினா எதிரொலித்து கிணற்றுக்குள் போட்ட கல்லைப்போலமடிந்து போனது.

அவளின் தேகம் நடுங்கியது. ஏனென்று புரியவில்லை. திடீரென மூலையிலிருந்து ஒரு கடுவன் பூனை குறுக்கே பாய்ந்து ஓடியது. அவளது மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. ஏதாவது பயங்கரம் நடக்கப் போகின்றதா?

''உம்மா பசிக்குது பசிக்குது'' என்றபடி ஓடிவந்த ஐந்து வயதுக் குழந்தை அவள் முந்தானையைப் பற்றியிழுத்து அழத்தொடங்கியது.

''மூதேவி இந்த நேரத்துலயா வந்து கரச்சப் படுத்துகிறாய்?'' என்று ஆத்திரத்துடன் வைதவாறே குழந்தையின் கன்னத்தில் பட பட என்று இரண்டு வைத்தாள், கதீஜா. அவன் வீரிட்டலறத் தொடங்கினான்.

சட்டென அவள் தன் கரங்களை கடிந்து கொண்டாள். ஏன்தான் இப்படி அடித்தோமோ என்று தாய்ப்பாசம் பொங்க குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

''உம்மா அவன எனக்குப் பக்கத்துல வைங்க. நான் மௌத்தாப் போப்பறவன்''

கதீஜாவின் இதயம் சிலீரிட்டது. என்ன பயங்கரமான வார்த்தைகள் இவை?

''உம்மா வெடாயா இரிக்கு. ஒலுப்பம் தண்ணி தாங்கோ''

கதீஜா புகைபோட்ட நீரை அவனுக்குப் பருக்கினாள். சட்டென்று மௌத்தாகப் போகின்றவர்கள் தண்ணீர் அதிகமாகக் குடிப்பார்கள் என்றவுணர்வு பளிச்சிட்டது. மௌத்துக்கு அறிகுறிதானோ இது?

அவன் மௌத்தாகப் போகிறான் என்ற கற்பனையைக் கூட அவளால் ஜீரணிக்க இயலவில்லை.

''எல்லாம் வல்ல நாயனே என் மகனக் காப்பாத்து'' அவள் மனம் மீண்டும் பிரார்த்தித்துக் கொண்டது.

''எங்க இன்னமும் காணல்ல. போடியாரத் தேடிப் போனவனுக்கு பொறுப்பு தெரியாதா'' என்று தனக்குள் அலுத்துக் கொண்டாள்.

போய்ப் பார்த்துவிட்டு வருவோமாஎன்று எண்ணினாள். ஆனால் மகனைத் தனியாக விட்டு

## ஊக்கமளித்தார்

ஆங்கில மகா கவி மில்டனது ''சுவர்க்க நீக்கம்'' போன்ற அரிய பெரிய நூலைப் படிக்கும் போது, இவ்வளவு நீண்ட நூலை இந்தக் கவி ஒரே பிறவியில் எவ்வாறு எழுதி முடித்தார்!'' என்று வியப்பு அடைந்தவர்கள் அநேகர். வியாசர் ஒருவரே தன் வாழ்நாளில் மகாபாரதத்தை எழுதியிருக்க முடியுமா? என்று ஐயுறுவோரும் சிலர் உண்டு. ''பிரசித்தி பெற்ற டாக்டர் ஜி. யு. போப் திருவாசகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தொடங்கிய போது, ஜோவர்ட் அறிஞரிடம், ''இந்த நீண்ட நூலை மொழிபெயர்த்து முடிக்கும் வரை நான் உயிருடன் இருப்பேனா என்பதே நிச்சயமில்லை'' என்றாராம். அதற்கு ஜோவர்ட்; ''நூலை எழுதத் தொடங்கினால் அது முடியும்வரை உயிருடன் இருப்பாய்'' என்று ஊக்கமளித்தாராம்.

நன்றி : மஞ்சரி,
(ச. ஐயாத்துரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் போகவும் அவளுக்கு மனம் வரவில்லை.

எனினும் எப்படியும் மகனைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு உந்தவே மூலையில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கை கையில் எடுத்துக் கொண்டாள்.

"எங்கம்மா போகப் போறீங்க?"

நஸீர் பலவீனத்துடன். தலையை உயர்த்திக் கேட்டான்

"வெளியே போடியாரப் பாக்கப்போனவன் இன்னமும் காணல்ல. என்னெண்டு போய்ப் பாத்துட்டு வாறன்" அவள் தயங்கியவாறே கூறினாள்.

"போகாதீங்க உம்மா. நா........ நான் மௌத்தாப் போறன்"

நஸீரின் பரிதாபம் தொனிக்கும் வார்த்தைகளைக் கேட்டு போகவும் முடியாமல் போகாமலிருக்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள் கதீஜா. எனினும் அவனுடைய கதையைப் பொருட்படுத்தாமல் நோயைக் கருத்தில் கொண்டு வெளியே போனாள்.

"உம்மா..." என்றொரு அலறல் கேட்டது.

கதீஜா பதகளித்தவாறே உள்ளே ஓடி வந்தாள்

"என்னடா என்ன?"

"உம்.. உம்... உம்மா" அவனால் பேசமுடியவில்லை.

நஸீர் விரைவாகச் சுவாசித்துக் கொண்டிருந்தான்.

மிகவிரைவாக...... விரைவாக..... விரைவாக......

* * *

அபுல்காஸிம் போடியார் வெளியே வந்தார் அவர் கையில்.....

"இந்தா கபூர் ஒண்ட காக்கா எண்ட புள்ளயக் காப்பதினதுக்கு நண்டியில்லாம நான் இருக்கப்படாது இந்தா இருநூறு ரூபா எடுத்துக் கொண்டு அவன ஆஸ்பத்திரிக்கு கொண்டு போ"

கபூர் வெடித்தான்.

"போடியார் சாமனத்தான் காசால வாங்க ஏலும் மனிச உயிர இல்ல. சீ நீங்களும் ஒரு மனிசனா ?"

கபூரின் குமுறலை அவர் பொருட்படுத்தவேயில்லை. அவரின் மகளும் மருமகனும் காரில் ஏறினார்கள். கார் சினிமா தியேட்டரை நோக்கி விர்ரென்று கிளம்பியது.

எவ்வளவு நேரம் கார் போன பாதையையே வெறித்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டு நின்றானோ தெரியாது, போடியாரின் கதறல் கேட்டு சுய நினைவடைந்தான் கபூர்.

"கபூர் கபூர் இஞ்ச ஓடிவா எண்ட புள்ளய பாம்பு கடிச்சிட்டு ஓடிவா"

"என்ன... என்ன... பாம்பு கடிச்சிட்டா"

கபூர் ஓடிப்போய் குழந்தையை கையிலெடுத்தான்.

தன் காக்காவையும், தன் உம்மாவையும் அறவே மறந்து போனான். குழந்தையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற மனிதாபிமான உணர்ச்சி உந்தித்தள்ள கல், முள், எதனையும் பொருட்படுத்தாது ஒரு மைல் தொலைவிலுள்ள விஷக்கடி வைத்தியரின் வீட்டை நோக்கி வேகமாக ஓடத்தொடங்கினான் கபூர்.

அபுல்காஸிம் போடியார் வெறுமையான முகத்துடன் பார்த்துக் கொண்டேயிருந்தார். பின் தன் மனைவியின் முகத்தை நோக்கினார். பின் மீண்டும் வீதியை நோக்கத் தொடங்கினார்.

(யாவும் கற்பனை)

## * பெண்களும் சளைத்தவர்கள் அல்ல! *

காவலூர் - ஜெகநாதனின் பேச்சை சுடரில் வாசித்தேன். ஈழத்திலுள்ள பெண் எழுத்தாளர்கள் தரமான படைப்புகளை தருவதில்லை என்ற கூற்றினை ஏற்றுக் கொள்ள முடியாது. அன்றிலிருந்து இன்று வரை எத்தனையோ பெண் எழுத்தாளர்கள் எத்தனையோ தரமான கதைகளைப் படைத்திருக்கிறார்கள். பல பரிசில்களையும் பெற்றிருக்கிறார்கள். தரமில்லாத படைப்புகளாயின் பரிசுகள் கிடைத்திருக்குமா? அப்படியாயின் அவர் சொற்படி பரிசு கொடுத்தவர்கள் முட்டாள்களாக்கப் படுகிறார்களா? அவருக்கே கிடைத்திராத சாகித்திய மண்டலப் பரிசு ஒரு மண்டூர் அசோகாவுக்கு கிடைத்திருக்கிறது. "ஒரு கோடை விடுமுறையை மிக யதார்த்தமாயும் ஆழமிக்க ஒரு சித்திரமாயும் படைத்து எல்லோரது பாராட்டுதல்களையும் பெற்றவர் ஒரு பெண் எழுத்தாளர்தான். கண்டனம் சொல்லுவதும் தாழ்த்திப் பேசுவதும் சரியான விமர்சனமாகாது. தனிப்பட்ட கோபதாபங்களை தீர்த்துக் கொள்ள இலக்கிய மேடையை உபயோகித்து விமர்சிப்பது அவருக்கு அழகில்லை. ஈழத்தைப் பொறுத்த வரை ஆண்களுக்கு இணையாக பெண்களும் தமது திறமையை காட்டி வருகிறார்கள். காவலூர் - ஜெகநாதன் இதை மறைக்கமுடியாது.

இவ்வண்ணம்.
தாமரைச்செல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்

## — ஒரு சிறந்த நூலுக்கான அறிமுகம்.

— நந்தன —

பாரதி நூற்றுண்டு நல்ல அறுவடைகளைத் தமிழுலகுக்கு தந்திருக்கிறது. பாரதி தந்த களஞ்சியங்கள் தொடர்பான புதிய புதிய ஆய்வுகளும் தேடல்களும் மிகுதியும் தொடர்ந்து ஆரோக்கியமான சூழலைப் பிரசவித்திருக்கிறது. தமிழகத்திலும் ஈழத்திலும் மட்டுமன்றி உலகெங்கும் பாரதிபற்றி பேசப் படுகிறது. சிறப்பாக ஈழத்தில் பாரதி ஆய்வுகள் ஆழமாகவும் அகலமாகவும் மேற்கொள்ளப்படுவதில் நாம் பெருமைப்படலாம். ஈழத்து ஆய்வுகளின் கனதிபற்றி பெருமிதப் படும் அதே வேளை அவையாவும் நூல் வடிவில் பொலியும் வசதியின்மை வருத்தம் தருகிற நிலைமைதான்.

தமிழ் நாட்டிலோ நிலைமை மாருக பாரதியினுடைய படைப்புகள், பாரதி வரலாறு, பாரதி ஆய்வுகள் நூல் வடிவில் பல படவும் வெளிவருகின்றன. பெரும்பாலானவை தரமானவை என்று கூறமுடியாவிட்டாலும் காலத்துக்கு வேண்டியவையே. சிறுபான்மையான அக்கரையின் சிறந்த-சிகர முயற்சிகளிலே ஆய்வாளர் பெ. சு. மணி எழுதிவந்துள்ள பாரதி நூல்கள் அமைகின்றன. அவற்றிலொன்று 'பாரதியாரும் தமிழ்ப்புலவர்களும்' என்கிற நூலாகும்.

திரு. பெ. சு. மணி அவர்கள் பல நூல்களின் ஆசிரியர். இந்திய தேசியத்தின் தோற்றமும்-வளர்ச்சியும் என்கிற பெரிய நூலை எழுதி பரிசு பெற்றவர். பாரதியாரும் இராமகிருஷ்ணர் இயக்கமும், பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை, பாரதியாரும் சமூக சீர்திருத்தமும் முதலான அரிய நூல்கள் அவருடையன.

ஆய்வு நோக்கிலானதேடல், கடுமையான உழைப்பு பெ. சு. மணி அவர்களின் இயற்கை பண்பு. சிலம்புச் செல்வர் ம. பொ. சி.கூறுகிறுர். 'நூலகங்களே இவருடைய வாசஸ்தலங்கள். அறிஞருலகிலேயே சஞ்சாரம் செய்பவர். பல அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ள இவருக்கு பாரதியார் இலக்கியங்களை ஆய்வதிலே தனி ஆர்வம் உண்டு'.

பூங்கொடி பதிப்பகம் அழகுற வெளியிட்டுள்ள 'பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்' என்கிற நூல் பாரதியார் சங்கம் நடத்திய பாரதியார் நினைவு நாள் விழாவிலே வெளியிடப்பட்டது. வித்துவ வீம்பு பேசாமல் இவ்வாய்வு நூல் எழுத, வெளிவர உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவுகூரும் பண்பாளரின் முன்னுரையோடு நூலுள்ளே நுழைகிறேம்.

முதல் அத்தியாயம்—பாரதிக்கு முன் தமிழ்ப்புலவர்களின் நிலைமை 18ஆம், 19ஆம் நூற்றுண்டுகளை சுருக்கமாகவிளக்கி 'தென்னுட்டுத் தமிழ்ச் சங்கம்' திராவிட பாஷா சங்கம் முதலானவை பற்றி விபரித்து நமது பண்டிதர்கள் என்கிற பகுதிக்கு வருகிறேம். யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை பற்றி ஒரு பகுதி. தமிழ்ப்புலவர்களின் வறுமை பற்றியும் ஒன்று. கார்டுவெல்டு தந்த திருப்பத்தை ஆராய்ந்தபின் சுவாமி விவேகானந்தர் பற்றிப் பார்க்கிறேம். மதுரை தமிழ்ச்சங்கத்திற்கு வந்து—முதல் அத்தியாயம் இப்படி முடிகிறது—பாரதியாருக்கு முந்திய புலவர்கள் எழுப்பிய பிரச்சினைகளையும் புகுத்திய புதுக் கண்ணேட்டங்களையும் பாரதியார் ஆய்ந்து தமது கருத்துக்களை திட்டவட்டமாகச் சாற்றினுர்.

முதற் பகுதியிலேயே அறிஞர் மணி அவர்களின் கடும் உழைப்பு, ஒழுங்கமைக்கும் ஆற்றல் பரந்து பட்ட பார்வை பின்னணிகளைச் சிறப்புற அமைக்கும் பாங்கு வியக்க வைக்கிறது.

அடுத்தது—பாரதியார் அளித்த திருப்பம், பாரதியார் கருத்துக்கள் பெருமழையாகிப் பொழிகின்றன. உண்மையான கவித்துவம் மறைந்து போனதற்கு இலக்கண வித்துவான்கள் கவி பாடத்தொடங்கியதும் ஒரு காரணம், சுதந்திர நாட்டில்தான் தமிழ் வளர்ச்சி, கலை இலக்கிய வளர்ச்சியில் பொது மக்களின் பங்கேற்பு எத்தனை எத்தனை கருத்துக்கள். புதிய வழியில் தமிழின் ஆற்றலை விளக்கவந்த இரு பேரறிஞர்களான பி. ஆர். ராஜமையர். மகேச குமார் சர்மா ஆகியோருக்கு ஆதரவு கிடைக்காமல் போனதைப்பற்றி பாரதியார் வருந்தியதை விபரிக்கிறுர். பாரதியாரின் சுய விமர்சனக் குரல் அருமையான பகுதி. பாடல்களின் பண்ணழகு பற்றியும் தடை செய்யப்பட்ட 'கனவு' பற்றியும் தெளிந்த விளக்கங்கள். பாரதி கவிதா மண்டலம் பற்றிய விவரங்களுடன் அத்தியாயம் முடிகிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறதா? அது அள்ளித்தரும் தகவல்களும் பாங்கும் பாரதி பற்றிய ஒரு பிரமிப்பையே நம் நெஞ்சத்திரையில் விரிக்கிறது.

அடுத்து பாரதி போற்றிய தமிழ்ப்புலவர் மரபு பற்றியது. அந்த மரபை பாரதியின் பார்வையில் விரித்து 'புலவோர் வாயிற் துதியறிவாய்' என்ற ஒரடியிலேயே செறிவுறச் சொல்லியது கூறி முடிய — மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையும் பாரதியும் என்கிற அத்தியாயம் வருகிறது. சின்னசங்கரன் கதையிலே பாரதியார் சுந்தரம்பிள்ளை பற்றி பாடியது பற்றிய விவரிப்பு, தாமோதரம்பிள்ளை பற்றிப் பாடியது பற்றிய விபரிப்பு, வ. உ. சி. கருத்து என்று விரிவாகவும் தெளிவாகவும் வரையப் படுகிறது.

உ. வெ. சாவும் பாரதியாரும் என்கிற அத்தியாயத்தில் உ. வெ. சா,பாரதி தொடர்பான பலவும் ஆராயப்படுகின்றன. தமிழ்ப் புலவர்களிடம் பாரதியார் எதிர்பார்த்தது என்கிற அத்தியாயத்தில் கந்தசாமிக் கவிராயர், அரசஞ்சண்முகனூர், சுப்பிரமணியக்கவிராயர், முதலானோரை பாரதிபாராட்டியது கூறப்படுகிறது. வையாபுரிப்பிள்ளை: தேவநாயகம் பிள்ளை, பாரதிதாசன், கோபாலகிருஷ்ணையர், சிவஞானயோகி, வி. க. போன்ற சான்றோர் பலரால் பாரதி போற்றப்பட்டதும் உறவுகளும் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது, ஒழுங்கு படுத்தப்பட்ட நிறைந்த தகவல்கள் பாரதி பற்றிய ஒரு முழுமையைத் தரிசிப்பதற்கு உதவுகின்றன.

'செந்தமிழ் நாடென்னும்' போதினிலே' என்கிற பாடல் ஒருபோட்டியிலே இரண்டாம் பரிசு பெற்றதையும் போட்டி தொடர்பான பின்னணிகள் விபரங்களையும் கூறி முதற் பரிசு பெற்று பாரதியை 'வென்ற' பாடலை முழுமையாக வெளியிட்டு - குத்திக்காட்டுகிற பாங்கு நயக்கத்தக்கதாக உள்ளது, இறுதி அத்தியாயம் சுதேச கீதங்கள் மீது விதிக்கப்பட்ட தடையுத்தரவு பற்றி விளக்குகிறது.

நூலின் பிற்சேர்க்கையாக பாரதியார் பேசிய ஒரு கூட்டத்தில் டாக்டர் எஸ். சுப்பிரமணியஐயர் ஆற்றிய தலைமையுரையும் தாமரையில் நூலாசிரியர் எழுதிய கட்டுரையும் பாரதியார் பற்றி வ. ரா. எழுதிய கட்டுரைச் சுருக்கமும் இடம்பெற்று நிறைவு பெறுக்கு கிறது.

டாக்டர் பெ. சு. மணி வயதில் பெரியவர். சுறுசுறுப்பில் இளைஞர். அதுவும் இலக்கிய ஆய்வு என்றால் தேனீயைவிட வேகமாக செயலாற்றுபவர். அவரது பாரதி ஆய்வுகள் - இத்துறையில் நிறையவும் பயன் விளைப்பவை. அவரது பாரதி நூல்கள் பாரதி இலக்கிய ஆர்வலர்களுக்கு பாட நூல்கள். பெ. சு. மணி அவர்களின் பணி தொடர வாழ்த்துவோம்.

## சுடர் நண்பர் வட்டம்

**த. ஜெயா.**
23/4 D. பதுளைபிட்டிய வீதி
பதுளை.

**பொழுதுபோக்கு:** கதை எழுதுதல், பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல் ஆகியவை.

**எம். எஸ். மயில்வாகனம்**
துடுகலைத் தோட்டம்,
தெபுவனை.

**பொழுது போக்கு:** சுடர் வாசித்தல், புகைப்படம் எடுத்தல் நண்பர் நண்பியர் தொடர்பு.

**J. பற்றிக். (ஜெயம்)**
78, பெரிய பண்டிவிரிச்சான்
மடுக் கோவில்,
மடு.

**பொழுதுபோக்கு:** வன விலங்குகள், பறவைகள் வளர்த்தல், பாடல்கள் இசைத்தல், ஓவியம் வரைதல்.

**M. நிர்மலா தேவி.**
c/o M. M. நாயகம்,
மண்காடு
புங்குடுதீவு - 10

**பொழுதுபோக்கு:** கதை கட்டுரை எழுதல், சுடர் வாசித்தல் நண்பர் நண்பியர் தொடர்பு

**சி. கருணாநிதி ராமஜெயம்.**
சதர்லேன்ட் — எல்ல.

**பொழுதுபோக்கு:** நாடகம் எழுதுதல், கதை, அரட்டை அடித்தல்.

**V. எட்வர்ட் ஜோர்ஜ்.**
66/3 வேகந்த வீதி
கொழும்பு - 2.

**பொழுதுபோக்கு:** கிரிக்கட் உதைபந்தாட்டம், பத்திரிகை வாசித்தல்.

**எஸ். ரி. ஷோபனா.**
நியூ காமதேனு புத்தகசாலை
கண்டி றோட்,
அ. பு. சந்தி
திருகோணமலை.

**பொழுதுபோக்கு:** வானொலி T. V. பத்திரிகை வாசித்தல்.


**க. மேகதாஸ்.**
பிறிமா(சிலோன்)லிமிட்டட்
சீனன்குடா.

**பொழுதுபோக்கு:** நீந்தல், வாசித்தல், கராட்டி, உதைபந்தாட்டம்.

**சிவா. பத்மநாதன்.**
இல- 3 கூளாவடி,
மட்டக்களப்பு.

**பொழுதுபோக்கு:** கவிதை, ஓவியம், கட்டுரை முதலியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஒருவர்:** என்ன? அவர் தபால் பெட்டியைப் பார்த்துக் கும்பிடுகிறாரே...

**மற்றவர்:** அவர் ஒரு அபேட்சகர்...அசப்பில் பார்த்ததெல்லாம் ஆள் மாதிரித்தான் தெரியும் அவருக்கு!

* * *

**அபேட்சகர் மனைவி:** என்னங்க..... நம்ம வேலைக்காரனையும் கும்பிடுகிறீர்களே...

**அபேட்சகர்:** உஸ்.. சத்தம் போடாதே... இதெல்லாம் நடிப்பு... தேர்தல் முடியும்வரை தான் இப்படி.

* * *

**ஒரு கழுதை:** ஏண்டா காலாலே அடித்தாய்...?

**மறு கழுதை:** நீ ஏண்டா என்னை மனுசன் என்று பழித்தே...?

**ஒரு கழுதை:** போயும் போயும் உனக்கு அந்த மனுசப் புத்திதாண்டா வரும்!

* * *

**பெண்வீட்டார்:** மாப்பிள்ளைக்கு என்ன தொழில்?

**கல்யாணப் புரோக்கர்:** ..ஹி ஹி ஹி...... அவரும் ஒரு கல்யாணப் புரோக்கர்தான்...... நல்ல வருமானம்.

* * *

**ஒருத்தி:** முந்தி, நாத்திகராய் இருந்த உன் கணவர் இப்ப அடிக்கடி கோயிலுக்குப் போய் வருகிறாரே... என்ன காரணம்?

**மற்றவள்:** அவர் புதிசா ஒரு 'ஹொண்டா' கொண்டு வந்திருக்கிறார்!

— **கதிர் மாணிக்கம்.**

★ ★ ★

**அப்பா:** என்னடா பூட்டிக் கிடக்கிற கதவப் பார்த்து 'பண்ணினேர்மொழி...' பாடிக் கொண்டிருக்கா?

**மகன்:** வீட்டுத் திறப்பு தொலைஞ்சு போச்சப்பா... அதுதான்...

**அப்பா:** ...?......?......?...

* *

**வாசகன்:** பாரதி எழுதிய சிறுகதைத் தொகுதி விற்பனைக்கு உண்டு என்று எழுதியிருந்தீர்களே... ஏது உங்களுக்கு பாரதி எழுதிய சிறு கதைகள் ?

**ஆசிரியர்:** பாரதில்லப்பா .. பா. ரதி என அடித்தோம் டொட் அழிஞ்சு போச்சி........ வி. பி. பி. ஓடர்களும் வந்து குவிஞ்சிருக்கு ..

**வாசகன்:** ...!......!......! ..

— **மண்டூர் செல்வானந்தன்.** —

★ ★ ★

**ஆசிரியர்:** ராமு ஏன் அவனை குரங்கு குரங்கு என்று கூப்பிடுகிறாய்?

**ராமு:** அவனுடைய பெயர் கு. ரங்கு சார். அதுதான் சுருக்கமாக குரங்கு என்று கூப்பிட்டேன்.

— **ரவிச்சந்திரன்.** மட்டக்குளி.

★ ★ ★

**தோட்டத் தொழிலாளி:** முன்பெல்லாம் தோட்ட தொழிலாளருக்கு, மாதச் சம்பளம் கோரி 'வேலை நிறுத்தம்' செய்த நீங்கள் ஏன் இப்போது மௌனமாக இருக்கிறீர்கள்.

**தொழிற்சங்கத் தலைவர்:** அட சும்மா போப்பா! இப்ப நாங்கள் எல்லாம் மாதச் சம்பளம் வாங்கி கிட்டுத்தான், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம். அத கெடுக்கப் பார்க்கிறாயே.

* * *

**கட்சித்தொண்டன்:** 'நம்ம கட்சிக் கணக்கில் இந்த நகரத்தின் 'வீதிச் சுவர்'களுக்கெல்லாம் சுண்ணம் அடிக்க வேண்டும்!'

**கட்சித் தலைவர்:** 'ஏம்பா?'

**கட்சித்தொண்டன்:** 'வந்து... பாருங்க......! போன தேர்தலின் போது, நாம் எழுதிய சுலோகங்களும் வாக்குறுதிகளும் அப்படியே இருக்கு! அதை மக்கள் மறுபடியும் படிச்சா ஆபத்து நம்ம கட்சிக்குத் தானேங்க?'

* * *

**சின்னவன்:** ''நீங்கள் குடிச்சிட்டாலும் நிதானம் தவற மாட்டீங்க போலிருக்கே!''

**பெரியவர்:** ''(பெருமையுடன்) ஆமா. எப்படி கண்டு பிடிச்சீங்க?'

**சின்னவன்:** நேற்று இரவு குடித்துவிட்டு வந்து, எங்களோட மாட்டுக் கொட்டிலில் படுத்துக் கொண்டு ''நான் குடிச்சாலும் நிதானம் தவற மாட்டேன்'' என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்த பொழுதுதான் கண்டு பிடிச்சேன்!

**பெரியவர்:** (அசடு வழிந்தது.)

— **சிரிப்பையா**

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சரங்கள்

## உயிருடன்...

—பன்விலை சாந்தமணாளன்—

ஓ......
மரகதப் பசும்
தேயிலைச்
செடிகளே......!
உங்களுக்குப்
பசுமையளித்த
நாங்கள்
வரண்டு
நிற்கிறோம்......!
குருதியை
வியர்வையாக்கி
நீராய் வார்த்து....
உடலினை
உரமாய் புதைத்து
உங்களை வளர்த்த
எங்கள் உடல்
உரம் பெற
உணவின்றித்
தவிக்கிறோம்......!
களைகளையகற்றி
கவ்வாத்து செய்து
உங்களைப் பேணி
வளர்த்த
நாங்கள்......
உரிமையற்று
வாழும் வசதியற்று
பேணுவாரின்றி
உயிருடன்
மாய்கிறோம்......!

## தாலி !

—எம். பிரேமப்பிரியா—

சீதனம் என்கின்ற
சீர்மிகு பெண்ணைப்
பெற விரும்பி - ஒரு
மங்கையின் கழுத்தில்
மனம் விரும்பாது
போடும் முடிச்சு.

## பாரதி - நீ

— த. பேரின்பம் —

கவிதா ஆட்சியில்
செங்கோல் ;
தமிழ் உலகின்
நெம்பு கோல்;
தனி ஒருவனின்
ஊன்று கோல் !
பாரதி - நீ
பசுமையை
வார்க்க வந்த நதி !
கொடுமையை
எரிக்கவந்த தீ !

## ஏன்

- சி. கருணாநிதி ராமஜெயம் -

பாட்டன் முதல்
பேரன் வரை
தோட்டத் தொழில்
நாட்டமுடன்
செய்த போதும்
வீட்டிற் படுத்துறங்கப்
பாயுமில்லை
நாட்டில் நாங்களும்
மனிதரென்ற
நிலையுமில்லை
ஏன்...?
இந்த வாழ்வு.

## சோம்பல்

— முருகு —

பல்லுப் போனால்
சொல்லுத்தான் போகும் !
ஆனால் — வாயினுள்ளே
இப்பல் வந்தால்
வாழ்வே போகும் !

## பசி

- எஸ். கே. ராஜரெத்தினம் -

உலகில்
போர் ஏதும் இன்றி
உயிர்களைக் கொன்று
குவிக்கும் - பயங்கர
ஈடிணையற்ற,
எவராலும் அழிக்க
முடியாத,
அற்புதமான,
அனைத்து நாட்டிலும்
காணப்படும் — ஒரே
ஆயுதம்.

## பாவம்

- பாலமேனு, மண்டைதீவு-1

மெர்க்குரி விளக்கேற்றி
மேளதாளம் கொட்டி
தாலி தாரம் பற்றி
தரமாக பேசவைத்து
'ரிவி'யும் காட்டி 'ஸ்பெசல்'
கச்சேரியும் நடத்தியவர்
பாக்கிப் பணம் தீர்க்க
பத்தினியுடன் தர்க்கம் புரி
கின்றார்.

## மனைவி

— ராம்ஜீ —

நான் —
விஷமெனநினைத்து
ஒதுக்கும் போதவள்
அமுதமாகிறாள் !
நான் —
அமுதமென்றெண்ணி -
பருக நினைக்குங்காலவள்
விஷமாகி விடுகிறாளே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து...

## "ஆற்றங்கரை அரசு"

— கண்ணன். தென்மட்டுவில் —

அடர்ந்த மரங்கள் வளர்ந்திருந்த பெரிய காடு அது. அந்தக் காட்டின் நடுவே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங் கரையில் ஒரு பெரிய அரச மரம் நின்றது.

ஆற்றிற்குத் தூரத்தில் நின்ற மரங்களுக் கெல்லாம் மழை காலத்தில்தான் போதிய தண்ணீர் கிடைக்கும். கோடை காலத்தில் அவை தங்கள் வேரை நிலத்தில் மிக ஆழத் திற்கு நீட்டி ஈரத்தை இழுத்துக்கொள்ள வேண்டும். ஆற்றங்கரையில் நின்ற அரசமரத் திற்கு ஆண்டு முழுவதுமே தண்ணீர் கிடைக் கும். அது மாத்திரமா? தண்ணீரோடு அள்ளுப் பட்டுவரும் இலை குழைகள் உரமாகி அரச மரத்திற்கு உணவாகப் பயன்பட்டன. மரம் நன்றாகச் செழித்துப் பரந்து வளர்ந்தது, வலி மையும் பொலிவும் பெற்று பூரிப்புடன் நின் றது.

மகிழ்ச்சி பொங்கிய அரச மரம், ஒரு நாள் மற்ற மரங்களைப்பார்த்து 'நான் உங்களுக் கெல்லாம் தலைவன்' என்று கூறியது.

மற்ற மரங்கள் மௌனமாய் நின்றன.

ஆற்றின் வளத்தால் பலம் பெற்ற அரச மரம் அகங்காரத்தோடு பேசுவதை அந்த மரங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்துப் பேசவும் முடியவில்லை. எனவேதான் அவை பேசாமல் நின்றன.

நாட்கள் நகர்ந்தன.

இருந்தாற்போல் ஒரு நாள் தூரத்தே உள்ள மலையில் மழை பெய்தது; இடியோடும் மின்னலோடும் பெருமழை பொழிந்தது.

ஆற்றில் வெள்ளம் பெருகி கரை புரண்டு வேகமாக ஓடியது: கரைகளை அரித்துக்கொண்டு மரங்களை விழுத்திக்கொண்டு ஓடியது. அரச மரம் நின்ற இடமும் அரிப்பெடுத்துக் கரைந்து விட்டது. அதன் பெரிய வேரெல்லாம் வெளியே வந்தன. அரசு நிற்கமுடியாமல் சாய்ந்து ஆற்றில் விழுந்தது. வெள்ளம் அந்தப் பெரிய மரத்தையும் அடித்துக்கொண்டு ஓடிவிட்டது.

ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான். பாவம்! என்று சொல்லி மற்ற மரங்கள் அரச மரத்திற்காகப் பரிதாபப்பட்டன.

சிறுவர்களே! அரசமரம் பெரியதுதான். அதன் கிளைகளையும் வேர்களையும் பார்த்திருப் பீர்களே! அப்படியான மரத்தைக் கூட ஆற்று வெள்ளம் அரித்து விழுத்தி, அடித்துக்கொண்டு போகிறது. அதுபோலத்தான் அரசியல் வாழ் வும், எவ்வளவுதான் செல்வாக்குப் பெற்ற வரானாலும் அந்த சுகபோகவாழ்வு நிலையான தல்ல என்பதை இப்பொழுதே தெரிந்து கொள்ளுவீர்களா?

(வாசகர் வாய்மொழி தொடர்ச்சி...)

தமிழ் அமுதமொன்று தவழ்ந்தது என்கையில்
தாகத்துடன் நானும் வாசித்தபோது.
தமிழ் மணக்கும் புதுப்படைப்பு
தரமான பல சுவைகள்.
சுடரொளி பரப்பி நீயும்
புத்தொளி தருகின்றாய்.
வளர்க நின் தமிழ் சேவைகள்.
வாழ்க நின் தமிழ்தொண்டு.

எஸ்- நாகராஜா. செக்கடிப்புலவு,
வவுனியா.

* * *

மங்கையவள் மென்னகை புரிய, ஆடி அசைந்து வந்த வைகாசி- ஆனி 'சுடர்' கண் டேன். "சுடலையின் மறு பக்கம்"- 'அருமை' பாராட்ட வேறு வார்த்தைகள்......மன்னிக் கவும்...கிடைக்கவில்லை. அது சரி...... கதைப் படி தாய் விதவையானவள் [ஆக்கப்பட்ட வள்] படத்தில் தாயின் நெற்றியில் பென் ணும் பெரிய திலகம் ஜொலிக்கிறதே...அது எப்படி...? 'சுடரி'ன் இலக்கிய பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

ப. சு. செல்வரத்தினம்.
124, பிரதான வீதி, பன்விலை.

* * *

வைகாசி மாத சுடர் இதழை படித்து பரவசமடைந்தேன். பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை என்ற பாடலுக்கு ஒப்ப நாலும் கலந்துனக்கு நான் தருவேன் என்ற வெண்பாவுக்கு ஒப்ப, கலை இலக்கிய திங்கள் இதழாய் ஒளிவிட்டு பிரகாசிக்கும் சுடரே உன் தமிழ்த்தொண்டு.. ....தொடரட்டும்.

த. சிவநாதன். பிரதான வீதி,
செட்டிக்குளம்.

* * *

எங்களைப்போன்ற தொடர்புச் சாதன வசதி குறைந்தவர்களுக்கு-'சுடர்' மூலம் தான் தமிழரசர்களின் வண்டவாளங்கள் வெளிச்சமாகின்றன. வைகாசி இதழில் வந் துள்ள 'காலபலன்கள்' சிரிப்பை தூண்டி சிந்திக்கவும் வைக்கின்றன. 'அறுவை' குறுகி விட்டதே ஏன்? அரட்டை கூடிவிட்டதாலா? எல்லாவற்றுக்கும் மேலாக புதுவை இரத் தினதுரையின் கவிதை என்னை வெகுவாக கவர்ந்துவிட்டது. 'புதுமை'யை தரிசிக்க வேண்டுமெனில் அதற்காக அல்லும் பக லும் உழைக்க வேண்டும். அதுசரி! ஏன் எட்டாவது ஆண்டு பற்றிய எண்ணமின்றி இருக்கிறீர்கள்? எங்கள் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ராம்ஜீ. — எல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மில்க்வைற் சலவைப் பவுடர்

மாணவ மணிகளே!

உங்கள் சீருடைகளை துரிதமாகவும் மேலும் பிரகாசமாகவும் சலவை செய்ய ''மில்க்வைற் சலவைப்பவுடரை'' வாங்கி உபயோகியுங்கள்.

மேலுறைகளை சேகரித்து அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பியையும், அறிவு நூல்களையும், மில்க்வைற் செய்தியையும், மற்றும் சிறந்த பரிசுகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

''மில்க்வைற்''

த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்,
தொலை பேசி: 7233


## ''சுடர்'' நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கலாம். தெளிவான விலாசத்துதுடன் தங்கள் பொழுதுபோக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் நண்பர் வட்டம்
194ஏ, பண்டாரநாயக்க
மாவத்த,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்புகிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்து...... ... மாதம் முதல் சுடரை அனுப்புமாறு வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12 இல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org